# துணிந்தெழு

வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்

Thuninthelu Magazine

sky தமிழ் TV CHANNEL

பதிவு இல:
ISSN 2792-1026

+94776391188 www.skymediasl.com skytamil.lk@gmail.com


மாதமிருமுறை | இதழ் - 16 | 08 நவம்பர் 2021 | @skytamil.lk




AMR Talk நடாத்திய திறமையான, இளம் சிட்டுக்கள் போட்டி நிகழ்ச்சியின் வெற்றியாளர்கள் அறிவிப்பு..!




இலவச இணையவழி கல்வித்திட்டம் Edu Free Academy



இலங்கை ஜனநாயக ஆசிரியர் சங்கத்தின் தேசிய தலைவர் கமால்தீன்



கத்தாரில் ஓவியக் கலையில் கலக்கும் இலங்கை இளைஞன் நஸார் சர்பான்

## ஆசிரியை, எழுத்தாளர்
# இன்ஷிராஹ் இக்பால்
## அவர்களுடனான நேர்காணல்



# துணிந்தெழு

வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்

@skytamil.lk

மாதமிருமுறை | இதழ் - 16 | 08 நவம்பர் 2021





AMR Talk நடாத்திய திறமையான, இளம் சிட்டுக்கள் போட்டி நிகழ்ச்சியின் வெற்றியாளர்கள் அறிவிப்பு..!

07 பக்கம்

12 பக்கம்

இலவச இணையவழி கல்வித்திட்டம்
Edu Free Academy





ஆசிரியை, எழுத்தாளர்
இன்ஷிராஹ் இக்பால்
அவர்களுடனான நேர்காணல்

22 பக்கம்

35 பக்கம்

இலங்கை ஜனநாயக ஆசிரியர் சங்கத்தின்
தேசிய தலைவர் கமால்தீன்





கத்தாரில் ஓவியக் கலையில் கலக்கும் இலங்கை இளைஞன்
நஸார் சர்பான்

46 பக்கம்

# துணிந்தெழு

வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்


**பிரதம ஆசிரியர்:**

ஜே.எம்.பாஸித்

**இணையாசிரியர்:**

நுஸைலா பதுர்தீன்
பாத்திமா ஷிப்னா ஆதம்

**நிர்வாக குழு:**

றொஸான் முஹம்மட்
அஸ்வர் ரிஸ்வி
பாதிமா முனீரா
எம்.ஐ.எம்.அம்னா
ஷஹ்னா ஸப்வான்
பஹ்ரியா பாயிஸ்
ஆர்.எம்.சப்ராஸ் - ஊடகவியலாளர்
பாஷிரா ஜுனைடீன் - ஊடகவியலாளர்
முஹம்மட் ஹாசில் - ஊடகவியலாளர்

**ஆசிரியர் குழு :**

ஆதம்பாவா முஹம்மது சாஜித்
எம்.பஹ்த் ஜுனைட் - ஊடகவியலாளர்
ஜவ்சன் அஹமட் - ஊடகவியலாளர்
பாத்திமா சிரோணி
ஷகீனா ஷாகிர்
தி.தர்சினி
அகீப் நஸீர் - Graphic Designer
எம்.ஐ.எம். முபீத்
மஜினா உமறு லெவ்வை
பாத்திமா பின்த் சம்சுதீன்

**ஆலோசகர்கள் :**

கலாபூஷணம் நூருல் அயின் நஜ்முல்
கவிஞர் நஜ்முல் ஹுசைன்
ரஷீத் எம். பியாஸ் (நளீமி)
வசீமுல் அக்றம் - சட்டத்தரணி
ரிம்ஸா முஹம்மத் - எழுத்தாளர்
அமீன் மொஹமெட் (தமிழ்நெஞ்சம்)
பிஸ்ரின் முஹமத் - ஊடகவியலாளர்
ரினூசா நௌஷாட் - ஊடகவியலாளர்
ஜெஸீம் ஏ. ஹமீட் - ஐக்கிய இராஜ்ஜியம்


இறைவனின் அருளாளும், துணிந்தெழு வாசகர்களின் ஆதரவுடனும், சஞ்சிகை ஆசிரியர் குழுவினரின் விடா முயற்சியுடனும், புதிய மாறுதல்களுடன் வீறுநடை போட்டுக் கொண்டிருக்கிறது எமது துணிந்தெழு சஞ்சிகை. புகழனைத்தும் இறைவனுக்கே அல்ஹம்மதுலில்லாஹ்!

துணிந்தெழு சஞ்சிகை வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் எல்லாம்வல்ல இறைவனுக்கும், வாசகர்களுக்கும், சஞ்சிகை ஆசியர்குழாமிற்கும் நெஞ்சார்ந்த நன்றிகள்.




**ஜே.எம்.பாஸித்**
பணிப்பாளர்
ஸ்கை தமிழ் மற்றும் துணிந்தெழு சஞ்சிகை
+94776391188


தங்களது படைப்புகளும் எங்களது சஞ்சிகையில் இடம்பெற வேண்டும் எனில் கீழ் குறிப்பிட்ட ஈமெயில் மற்றும் வட்சப் இலக்கத்திற்கு அனுப்பி வையுங்கள்

+97431060249 skytamil.lk@gmail.com
www.skymediasl.com

Scan QR Code

விரைவில்...
GET IT ON Google Play | Available on the App Store

#Thuninthelu #skytamil.lk skytamil.lk skytamil.lk






# ஓர் பார்வை

அடடா வித்தியாசமான தலைப்பாய் இருக்கே என கண்ணில் பட்டவுடன் வாங்கிவிட்டேன். இந்நூல் என்னைப் பொறுத்தவரையில் கற்கும் அனைவரையும் நிச்சயமாக இரசிக்க வைக்கக்கூடிய புத்தகம். இதற்கு காரணம் இந்நூலுக்குள் ஒழிந்திருக்கும் சொல் மற்றும் மொழிநடை விளையாட்டு.

இந்நூலை படைத்தவர் திரு. சித்திரவேல் அழகேஸ்வரன். இவர் இது வரையில் மொத்தமாக 4 நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். இவர் ஒரு கணித ஆசிரியராக இருப்பதோடு தமிழ் மொழிமேல் அதீத பற்றுக் கொண்டவராகவும் இருக்கின்றார் என்பது இந்நூலை படித்தவுடன் தோன்றியது. என்(ண்) புதிர், எண்களின் விந்தைகளும் விளையாட்டுக்களும் ஆகிய நூல்கள் இவரால் எழுதப்பட்ட கணித புரட்சி புத்தகம் என்று தான் கூற முடியும். கூட்டல் தொடக்கம் கணிதத்தில்



**எம்.ஏ.எப். முபஸ்ஸிரா**
**இரண்டாம் வருடம், கலைப்பிரிவு**
**கொழும்பு பல்கலைக்கழகம்.**

இருக்கக் கூடிய அனைத்து பகுதிகளையும் வைத்து புதிய புதிய புதிர்களை உருவாக்கியுள்ளார். ஆசிரியரின் இம்முயற்சி மனதார பாராட்டக் கூடிய ஒரு விடயமாகும்.

புத்தகத்தை வாங்கியவுடனே பௌத்திரம் என்றால் என்ன என்று தேடினேன். அதற்கு நூலாசிரியரே விளக்கம் வைத்து விட்டார். தமிழ் மொழியானது சாதி, மதம், இனம் கடந்து அனைவராலும் பேசப்படக்கூடிய மொழி, அம்மொழிக்குள் எத்தனையோ மாயாஜால விளையாட்டுக்கள் ஒழிந்து கிடக்கின்றன. பௌத்திரமான பௌர்ணமி புத்தகத்திற்குள்ளும் மாயாஜால விளையாட்டை கையாண்டுள்ளார்.

இக்குறுநாவலில் காணப்படும் ஒவ்வொரு பந்தியும் வசனம் வசனமாக எழுதப்பட்டுள்ளது. ஒவ்வொரு பந்தியிலும் எழுதப்பட்டுள்ள வசனங்களில் முதல் எழுத்தானது ஒரே எழுத்தாக காணப்படுகின்றது, அதே சமயம் முதல் எழுத்தாக பயன்படுத்தப்பட்டிருக்கும் எழுத்து அந்த பந்தியில் வேறெந்த இடத்திலுமே முதல் எழுத்தாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. ஒவ்வொரு பந்தி முடிவிலும் ஆசிரியர் ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் சிக்குவாரா? என தேடிப் பார்த்தும் மிகவும் அழகான முறையில் நிதானமாகவே கதையை நகர்த்தி செல்கின்றார். இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகவும் அதே சமயம் எனக்கு மிகவும் பிடித்த பகுதியாக கதையாசிரியர் கதாநாயகனை அறிமுகம் செய்யும் விதம் என்னை அதிகம் கவர்ந்தது.

சுறுசுறுப்புக்கு பெயர் பெற்றவன் சுடும் வெயிலிலும் களைப்பில்லாமல் வேலை செய்பவன் சுத்தமாக களையில்லாமல் வளர்த்த பயிர்களை சுயநலமின்றியும் நட்டமின்றியும் வியாபாரம் செய்பவன் சுய மரியாதையையும் பிறர் மரியாதையையும் காத்து நிற்பவன் சுபாவத்தில் இனிமையானவன் அக்கிராமத்திலேயே சுந்தரத்திற்கு இணையில்லாதவன் யாரெனக் கேட்டால் சுண்டெலி போலிருக்கும் சிறுவர்கள் முதல் சுருக்கம் விழுந்த தோலையுடைய முதியவர்கள் வரை சுலபமாக கூறிவிடுவார்கள் அவன் மூக்கையன் தானென்று பந்திகளை வாசிக்கும் போதே கதையோடு ஓர் ஓசை நயமும் சேர்ந்து வெளிப்படுகின்றது.

என்னைப் பொறுத்தவரையில் வாசிப்போரை சோம்பலடையாமல் தொடர்ந்து வாசிக்கக் கூடிய உந்துதலை வாசகனுக்கு கொடுக்கின்றது. புதிய புதிய தமிழ் சொற்களை வாசகர்களுக்கு அறிமுகம் செய்கின்றார் ஆசிரியர். இந்நாவலில்




என்னை வெகுவாக கவர்ந்த விடயம் மொழிநடையாக இருந்ததால் ஆரம்பத்திலேயே பகிர்ந்து விட்டேன். இனி கதைக் கருக்குள் செல்வோம். மூக்கையன், தங்கம்மா இருவரும் மூவிழி என்ற கிராமத்தில் வாழ்ந்து வருகின்றனர். இருவரும் திருமணம் புரிந்து வாழ்க்கை நடத்தி வருகின்றனர். திடீரென மூக்கையனுக்கு பக்கவாதம் ஏற்பட்டு படுக்கையாகின்றான். அந்த சமயம் யாக்கோபு, மல்லிகா ஆகிய இருவர் அக்கிரமாத்துக்கு வருகின்றனர். அவர்கள் மூக்கையனின் நிலத்தை வாடகைக்கு எடுத்து அதனை பயிரிட்டு ஜீவியம் நடத்தி வருகின்றனர் ஒரு வருட காலமாக மழையின்மையால் வரட்சியேற்பட யாக்கோபு குடும்பத்தினர் ஊரை விட்டுச் செல்ல முடிவெடுத்த நிலையில் மல்லிகாவிற்கு குழந்தையின்மையால் மூக்கையன் தங்கம்மாவின் மகள் முத்தழகியை தத்தெடுக்க முயற்சித்தனர்.

முத்தழகி தத்துக்கொடுக்கப்பட்டாளா? மூக்கையனின் வாழ்க்கையில் என்ன என்ன நிகழ்ந்தன? யாக்கோபு மூக்கையனின் நட்பு என்ன ஆனது? இவ்வாறு பல்வேறு திருப்புமுனைகள் கதைக்குள் ஒழிந்துள்ளன. யார் அந்த பௌத்திரமான பௌர்ணமி? தங்கம்மாவா? மல்லிகாவா? முத்தழகியா? அல்லது வேறொருவரா? கதை முடிவில் கதையின் தலைப்புக்குமான பொருத்தப்பாடு தெரிந்துவிடும்.

இவ்வாறாக சிறந்நவொரு புத்தகத்தை வாசகர்களுக்கு கொடுத்து ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இப்படியும் எழுத முடியுமா என வியக்க வைத்து, இவ்வாறு நாங்களும் ஏன் முயற்சி செய்து பார்க்க கூடாதென ஊக்கத்தையும் தந்துள்ளது புத்தக பிரியர்களுக்கு தீனி போட்டுக் கொண்டிருக்கும் சித்தரவேல் அழகேஸ்வரன் அவர்களது ஒவ்வொரு முயற்சியும் வெற்றி பெற மனமார்ந்த வாழ்த்துக்களையும் மேன்மேலும் பல புத்தகங்களை வெளியிடவும் எல்லோருக்கும் பொதுவான இறைவனை வேண்டிக் கொள்கின்றேன்.

**புத்தகங்களை பெற்றுக் கொள்ள 0773910203 என்ற எண்ணுடன் அல்லது**

s.sithiravelalageswaran@gmail.com

**என்ற மின்னஞ்சல் மூலமாக தொடர்பு கொள்ளலாம்.**









# AMR Talk நடாத்திய திறமையான, இளம் சிட்டுக்கள் போட்டி நிகழ்ச்சியின் வெற்றியாளர்கள் அறிவிப்பு..!



எ.றொஸான் முஹம்மட்

**AMR Talk** சமூக ஊடகத்தினால் நடாத்தப்பட்ட போட்டியில் வெற்றியாளர்கள் அறிவிக்கப்பட்டனர். அதன் அடிப்படையில் பாடல் பிரிவிலிருந்து குருநாகல் பிரதேசத்தைச் சேர்ந்த சஜா பேகம் முதலாவது வெற்றியாளராகவும், மழலைமொழி பிரிவிலிருந்து நிந்தவூரைச் சேர்ந்த அனத் ஜிதா முதலாவது வெற்றியாளராகவும், அல்குர்ஆன் பிரிவிலிருந்து கண்டி மாவட்டம் முருதலாவை பிரதேசத்தை சேர்ந்த ஹப்ஷா பைஸல் முதலாவது வெற்றியாளராக நடுவர்களால் தெரிவு செய்யப்பட்டு அறிவிக்கப்பட்டனர்.

**AMR Talk** கடந்த மாதம் முதலாம் திகதி இப்போட்டியினை நாடளாவிய ரீதியில் நடாத்தியது. சுமார் 1500க்கும் மேற்பட்ட காணொளிகள் கிடைக்கப் பெற்றதுடன் ஆயிரம் போட்டியாளர்களை மாத்திரம் முன்னிலைப்படுத்தி ஆயிரம் போட்டியாளர்களில் இருந்து அதிகூடிய நேயர்கள் பார்வையிட்ட 10 பேரை தெரிவு செய்து அதிலிருந்து திறமையான போட்டியாளர்கள் மூன்றுபேரை வெற்றியாளராக அறிவித்தனர். ஏனைய ஏழு பேரும் இரண்டாம் நிலை வெற்றியாளர்களாக அறிவிக்கப்பட்டனர். மேலும் குருநாகலை சேர்ந்த றிஸ்னியா நிப்றாஸ் அதிக நேயர்கள் பார்வையிட்ட வெற்றியாளர்களாகவும் நடுவர்களால் அறிவிக்கப்பட்டன.




# நடுவர்கள்



இப்போட்டியின் நடுவர்களாக இந்தியாவிலிருந்து தென்னிந்திய பாடகர், சுயாதீன இசையமைப்பாளர், ஒலி பொறியியலாளர் / Radiocity - இந்தியா அஸ்வின் ஜான்சன் (Rj) அவர்களும், சிரேஷ்ட ஊடகவியலாளர் முன்னாள் தலைமை அதிகாரி – பிறை தொலைக்காட்சி முன்னாள் நிகழ்ச்சி முகாமையாளர் – சக்தி தொலைக்காட்சி சமீஹா சபீர் அவர்களும், கலாசார உத்தியோகத்தர், பண்பாட்டலுவல்கள் திணைக்களம் அதிபர் – மிஸ்பா/ஹல்/ஹதா அஹதியா பாடசாலை அஷ்–ஷேக் A.M.தௌபீக் (நளீமி) ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

மேலும் இந்நிகழ்ச்சியில் வெற்றிபெற்ற வெற்றியாளர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் அவர்களது வீடுகளுக்கு தபால் மூலமாக அனுப்பி வைக்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியை AMR Talk ஸ்தாபகர் எ.றொஸான் முஹம்மட் அவர்கள் தலைமை தாங்கி நடத்தியதுடன், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளராக ஸாக்கீர் அஹமட் அவர்கள். செயற்பட்டார் மேலும் ஊடக பங்காளராக Sky தமிழ் செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது.



sky தமிழ் TV CHANNEL

# துணிந்தெழு

வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்

## உங்கள் வடிவமைப்பு திறமையை வெளிப்படுத்துவதற்காக துணிந்தெழு சஞ்சிகை வழங்கும் ஒரு வாய்ப்பு!!




கவிதைப் போட்டியில் வெற்றி பெற்ற மூன்று வெற்றியாளர்களை தவிர்த்து இப்போட்டியில் கலந்து கொண்ட ஏனைய போட்டியாளர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் அவர்கள் அனுப்பிய கவிதைகளில் இருந்து சிறந்த கவிதைகளைத் தொகுத்து நூல்களாக வெளியிடுவதற்கு எமது ஸ்கை தமிழ் நிர்வாகம் தீர்மானித்துள்ளது.

**கவிதை நூல் தலைப்புக்கள்:**

1. துணிந்தெழு பெண்ணே!
2. வெறுமை காணா வறுமை.
3. கொரோனாவின் இழப்புக்கள்.

**மேலதிக தகவல் அறிய : +97431060249**

அனுப்ப வேண்டிய தொலைபேசி இல: +94776391188

மின்னஞ்சல் முகவரி: skytamil.lk@gmail.com

RICH LANKA TOURISM & INDUSTRY (PVT) LTD
PV NO: 00209634

அனுசரணை

துணிந்தெழு
வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்
@skytamil.lk
மாதமிருமுறை | இதழ் - 16 | 08 நவம்பர் 2021



# விதவை எனும் வேற்றுக்கிரகவாசி



அஸ்ஹா ரிஸாம்
வெல்பொத்துவெவ

நதியோடு நீராடி
மலர்கொடியோடு உறவாடி
மலைமேல் ஏறி
மழையில் நனைந்து
பனித்துளி ரசித்து
பட்டாம்பூச்சி போல்
பறந்திடும் வயது தனில்
பெற்றவர் பார்த்துவிடும்
திருமணத்தில்
பாதி தொலைந்து போனது
ஆனந்தம்...

ஆற்றங்கரை பிள்ளையார்
அடுத்த வீட்டு தோழி
அம்மா அப்பா ஆசையாய் வளர்த்த
பூனைக்குட்டி
மாங்கல்யம் பெற்ற மறுகணமே மறைந்து
போனது இவை அனைத்தும்...

உதட்டில் சிரித்து உள்ளுக்குள்
அழுதிடும் ஊமை நாடகம்
அரங்கேறியது அனுதினமும்,
முழுதாக ஆறு மாதம்
முடியும் முன்னே அவன்
ஆயுள் காலம் முடிந்து விட
உயிர் பறித்தான் எமதர்மன்...

ஆண்டவன் செய்த பிழையால்
ஆனதோ இந்தவிளைவு
புருஷன் இல்லை
பொட்டோடு பூவும் இல்லை
மூளியாக மூளைக்குள் வாழ்வு...

முடுமை இவள் வந்தவுடன்
முழுங்கி விட்டாள் என் மகனை
அத்தையின் வார்த்தைகளில்
உச்சக்கட்ட அர்ச்சனை,
தவறியேனும் முகம்
பார்த்து விட்டால்
தரித்திரம் என்ற சாடல்கள்...

திருமணமோ திருவிழாவோ
சீமந்தமோ சிறப்பு எதுவோ
முழித்திட வேண்டாம் மூதேவி
அவள் முகத்தில்...

காதில் படவே காட்டு
மிராண்டி பேச்சுக்கள்,
கண்டதும் ஒதுங்கி காறி உமிழ்ந்து செல்ல,
வெண்ணாடை கட்டியதால் விதவை என்ன
வேற்றுகிரகவாசியா...?



# உம்மும்மாவுக்கு ஓர் கவிதை

உங்களை இழந்த அந்த திங்களை
நினைத்துப் பார்க்கிறேன்..
அடங்காத அன்பினில் நீங்கள் எங்களை
அணைத்துக் கொண்ட முன்னைய நாட்கள்
தான் எத்தனை அழகு..

என்ன நடந்தது உங்களுக்கு?
உங்களைக் காண காலி நகர் நோக்கி
வரும் முன்னே நீங்கள் விடைபெற்றது
ஏனோ?

வஞ்சகர்கள் வந்துங்கள் ஊரினில்
விளையாடியதால் சொந்த மண் பிரிந்து
வந்த அந்த துயரக் கதை நீங்கள் அடிக்கடி
சொல்ல நாங்கள் கேட்போம், அப்போது
உங்கள் விழிகளில் ஒட்டிக்கொள்ளும்
நீர்த்துளியையும் நாங்கள் காண்போம்..

வாழ்தலின் அத்தனை துயர்மிகு
துரத்தல்களின் பின்னும் நீங்கள்,
தைரியமாய் வையகம் சிறக்க
வாழ்ந்தீர்கள்...
அதில் எங்களுக்கு ஓர் சந்தோஷம்...

ஆனால் இன்னும் கொஞ்சங் காலம் நீங்கள்
எங்களுடன் இருந்திருக்கலாம்,

அந்த வெள்ளை படர்ந்த புன்னகை
வதனத்தைப் பார்த்தே நாங்கள் அடிக்கடி
மகிழ்ந்திருப்போம்...

இன்னும் தான் எங்களால் ஏற்க
முடியவில்லை..
நீங்கள் வெள்ளைப் போர்த்திக்கிடந்த அந்த
இறுதி நாளை...

அந்தப் புன்னகை..
அந்தப் புன்னகை..
அதே தான்.. இன்னுமின்னும் எம்
விழிப்பார்வையில் வந்து போகிறது..

உங்களை வழியனுப்பி வைத்த அந்த
நொடிதான் எத்துனை துயர் மிக்கது,

உம்மும்மா..
இறுதியாய் நான் வேண்டுவதெல்லாம்,
சுவனத்துக் கட்டிலில் சாய்ந்திருக்கும் நீங்கள்
அடிக்கடி என் கனவில் வந்து போங்களேன்...

இப்படிக்கு உங்கள் பேத்தி



பஹ்மா ஜவ்ஸி
இலங்கை தென்கிழக்கு
பல்கலைக்கழகம்

# இலவச இணையவழி கல்வித்திட்டம்

## Edu Free Academy

தொகுப்பு:
ஷிப்னா ஆதம்

EDUFREE ACADEMY
Since. 2021
LEARN • BELIEVE • ACHIEVE
Your Door To The Future
Reg No.
MUPS/TL/2021/0914

கல்வியென்பது அனைவருக்கும் கட்டாயமான ஒன்று. அதிலும் தற்போது நாட்டை அச்சுறுத்திக்கொண்டிருக்கின்ற கொரோனா நோய்த்தொற்றின் காரணமாக கல்வியை பெற்றுக் கொள்ளுதல் என்பது கேள்விக்குறியாகிவிட்டது.

இந்நிலையில் பாடசாலைகள் மூடப்பட்டு கற்றல் செயற்பாடுகளும் இடைநிறுத்தப்பட்டிருக்கிறது. இதன் விளைவாக நாடு முழுவதும் உள்ள மாணவர்கள் கல்வியைத் தேடி பல திசைகளில் சிதறடிக்கப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

இதன் விளைவாகவே 2021 ஜூன் 05 ஆம் திகதியன்று இலவசக் கல்வி அனைவரது கைகளிலும் கிடைக்க வேண்டும் என்ற நோக்கில் Edu Free என்ற இலவசக் கல்வி நிகழ்ச்சி திட்டத்தினை ஆரம்பித்தார்கள்.

மூதூரில் உள்ள ஆசிரியர்களை வைத்தும் வெளிப் பிரதேசங்களில் உள்ள ஆசிரியர்களின் உதவியோடும் இலவச வகுப்புக்களை ஆரம்பித்து வைத்தார்கள். தரம் ஒன்று முதல் உயர் தரம் வரை அனைவருக்கும் இலவசக் கல்வி சரிசமமாக வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். இது கல்விக்கான இவர்களது மூன்றாவது முயற்சியாகும் கொரோனா ஆரம்பித்த காலத்தில் இருந்து கற்றல் செயற்பாடுகளுக்காக இவர்களால் முடிந்த நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார்கள்.

கொரோனா முதல் அலையில் மூதூரில் உள்ள ஆசிரியர்களின் உதவியோடு Rv Production அமைப்போடு காணொளிகள் பதிவு செய்யப்பட்டு ஊரில் உள்ள கேபில் டீவி மூலம் ஒளிபரப்பு செய்யப்பட்டது. இரண்டாவது அலையில் மூதூர் வலையக்கல்வி அலுவலகத்தோடு இணைந்து

Rv Production மற்றும் Mutur Makkal அமைப்பினால் காணொளிகள் பதிவு செய்யப்பட்டு முகநூல் வாயிலாக மூதூரில் உள்ள பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

மூன்றாவது அலையின் உச்சநிலை காரணமாக கற்றல் செயற்பாடுகள் நாடு முழுவதும் இடைநிறுத்தப்பட்டு பாரிய தேவைப்பாடு நிலவியது இதன் காரணமாகவே Edu Free எனும் இலவச கல்வி நிகழ்ச்சி திட்டத்தினை ஆரம்பித்து வைத்தார்கள். சில நன்கொடையாளர்களின் உதவியோடு தரம் ஒன்று தொடக்கம் உயர் தரம் வரை வாரம் முழுவதும் இலவச வகுப்புக்கள் நடாத்தப்பட்டது. அது மட்டுமின்றி நாட்டிலுள்ள பல பாடசாலைகளுக்கும் இவர்களின் திட்டத்தினூடாக இலவச வகுப்புக்களை வழங்கிக் கொண்டிருந்தார்கள் மேலும் இவர்களது Edu Free அமைப்பின் கீழ் கல்வி கற்கும் ஏழை மாணவர்களுக்கு குறிப்பாக மலையக மாணவர்களுக்கு Zoom யில் கற்பதற்கான Free Reload உம் அனுப்பி வைக்கப்பட்டது.



Iqbal Mohamed Roshan
Founder & Managing Director
Edu Free Academy

இலங்கை முழுவதும் இருந்து 10000 மாணவர்கள் இவர்களது Edu Free இலவசக் கல்வி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பயனடைந்து வந்தார்கள். சுமார் இரண்டு மாதங்களாக இலவச வகுப்புக்கள் ஒவ்வொரு நாளும் நடாத்தப்பட்டது. இலவசமாகக் கற்பித்த ஆசிரியர்களுக்கு முதலில் நன்றி சொல்லியாக வேண்டும் நாட்டில் ஆசிரியர் போராட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்தது இந்நிலையிலும் கூட சில ஆசிரியர்கள் தொடர்ந்தும் கற்பிக்க முன் வந்தார்கள். அவர்களது சேவையும் பாராட்டுக்குரியவை என்று இவர்களது நன்றிகளை ஆசிரியர்களுக்கு தெரிவித்தார்கள்.



Nawas Rawshan Mohamed
Founder & Managing Director
Edu Free Academy

இவர்களது அடுத்த முயற்சியாக மாணவர்களின் மனோநிலையை மேம்படுத்தும் முகமாக இவர்களது அமைப்பின் கீழ் பயனடையும் மாணவர்களை இலங்கை முழுவதும் மரக்கன்றுகளை நடும் ஒரு திட்டமும் ஆரம்பிக்கப்பட்டது. ஒரு மரக்கன்று நட்டு அதனை புகைப்படமாகப் பெற்று இவர்களது

## நிருவாக உறுப்பினர்கள்



**Sasheethu Fathima Amna**
Edu Free Academy



**Wiknaraja Sriyani**
Edu Free Academy



**Marzook Fathima Rusna**
Edu Free Academy



**Noufar Fathima Rilwana**
Edu Free Academy

அமைப்பினால் வெளியிடப்பட இருக்கின்ற E-Magazine யில் அந்த புகைப்படங்களை வெளியிட உள்ளார்கள். இதற்காக இலங்கை முழுவதும் இருந்து சுமார் 400 மாணவர்கள் மரக்கன்றுகளை நட்டு புகைப்படம் எடுத்து அனுப்பியும் வைத்துள்ளார்கள் என்பது ஒரு முக்கிய அம்சமாகும். இன்னும் சில தினங்களில் அதனை தொடராக மேற்கொள்ளவுள்ளார்கள்.

தரம் ஒன்று தொடக்கம் தரம் ஐந்து வரையான மாணவர்கள் தான் இந்நிலையில் அதிகம் பாதிக்கப்பட போகின்றார்கள் மேலும் ஒன்லைன் வகுப்புக்கள் மாத்திரம் அவர்களது கற்றலில் வளர்ச்சியை வழங்கப்போவதில்லை என்பதால் இவர்கள் மேல் விசேட கவனம் எடுப்பதற்காக PDF குழுமங்கள் ஆரம்பிக்கப்பட்டது. இலவச வகுப்புக்களை நிறுத்தி விட்டு அனைத்து மாணவர்களுக்குமான PDF குழுமங்கள் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது இலங்கை முழுவதும் இருந்து 20000 மாணவர்கள் பயனடைந்து கொண்டிருக்கின்றனர் இவர்களது இவ் முயற்சியினால். குறிப்பாக பல பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள், வலையக்கல்வி உத்தியோகத்தர்கள், ஆசிரிய சங்க உறுப்பினர்களும் அவர்களது மாணவர்களுக்கும் இதன் மூலம் பயன்களைப் பெற்றுக்கொடுத்துக்கொண்டிருக்கின்றார்கள். இதில் பாலர் பாடசாலை மாணவர்களும் உள்ளடங்குகின்றனர். தரம் ஒன்று தொடக்கம் உயர் தரம் வரை விஞ்ஞான மற்றும் கணித பிரிவு மாணவர்களுக்குமான கடந்த கால வினாத்தாள்கள், எதிர்பார்க்கை வினாத்தாள்கள், மாகாண மற்றும் பாடசாலை மட்டப் பரீட்சை பேப்பர்கள், ஆசிரியர் மற்றும் மாணவ கைநூல்கள், சுருக்க குறிப்புக்களும் வழங்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

இலவசக் கல்வி நிகழ்ச்சியாக ஆரம்பித்துச் சென்று கொண்டிருந்த இந்த திட்டத்தினை Edu Free Academy யாக பதிவு செய்து மாணவர்களின் கல்விக்கு தொடரான உதவிகளை செய்ய இவ் அமைப்பு முயற்சித்துக் கொண்டிருக்கின்றது. அதன் தொடராக உயர் தரம் கற்கின்ற மற்றும் பரீட்சை எழுதிய தன்னார்வ மாணவர்களைக் கொண்டு தரம் ஒன்று தொடக்கம் தரம்

ஐந்து வரையுள்ள மாணவர்களை விசேடமாக கண்காணித்துக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்குத் தேவையான பரீட்சை பேப்பர்களினை அனுப்பி வைத்து அதனை அவர்களை செய்வித்து அதனை போட்டோ பிடித்து மீண்டும் இவர்களுக்கு அனுப்பி சரிபார்த்தல். இதற்கான மேலதிக வழிகாட்டல்களை இவர்கள் வழங்கி கொண்டிருக்கின்றனர். மேலும் இவர்களது நுனர குசநந யுஉயனநஅல யினால் பரீட்சைகளும் நடாத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

பல தடைகள், இடையூருகள், சவால்களுக்கு மத்தியில் இவர்களால் பயனடைந்த மாணவர்கள் மற்றும் அவர்களின் பெற்றோர்களின் ஆறுதல் வார்த்தைகள் தான் எமக்கு இந்த அளவிற்கு முன்னேறிசெல்ல இடம் தந்து கொண்டிருக்கின்றது என்று கூறினார்கள். வறுமையின் கீழ் வாழ்வோருக்கு பணம் செலவழித்துக் கல்வி கற்பதென்பது மரண போராட்டம் தான் எனவே அவ்வாறானோர்கள் தான் எங்களின் இந்த சேவையின் தீணி அவர்களுக்காகத்தான் இதனை ஆரம்பித்து வைத்தோம் இலவசக் கல்வி அனைவரது கைகளுக்கும் கிடைக்க வேண்டும் என்பதே எங்களது எண்ணம் மற்றும் முயற்சியாக இருந்தது என்று மேலும் குறிப்பிட்டார்கள்.

Edu Free Academy ஆனது எதிர்காலத்தில் தேவைகள் இருப்பின் மீண்டும் இலவச வகுப்புக்களை நடாத்தி மேலும் மேலும் நாடு முழுவதும் உள்ள மாணவர்களுக்கு பயனளிக்கும் விதத்தில் முன்னெடுத்துச் செல்வார்கள் என்று உறுதியளித்துள்ளார்கள். இவர்களைப் போன்ற இளைஞர்கள் எமது நாட்டின் தூண்கள் என்றே கூறவேண்டும். இவ் அசாதாரண சூழ்நிலையில் மாணவர்களின் கல்விக்காக குறிப்பாக ஏழை மாணவர்களின் கல்விக்காக இவ்வளவு தூரம் முயற்சி செய்த இவ் அமைப்பிற்கும் இவ் அமைப்பு சார்ந்தவர்களுக்கும் துணிந்தெழு சஞ்சிகையின் பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்.

## நிருவாக உறுப்பினர்கள்



**Dharshika Vishani**
Edu Free Academy



**A.Waseema**
Edu Free Academy



**Thevaranjini Theiventhiran**
Edu Free Academy



**Mithusha Pushparaja**
Edu Free Academy

# கற்பித்த ஆசிரியர்கள்



**S.K.Fazeen**
MSc ( R ), BTech ( Hons ) in Science and Technology , Dip in English, Dip in Human Psychology
Teacher



**A.S.M.Muzaumi**
Teacher



**K.M.Nawas**
Teacher



**Sawahir Rizwan**
Islahi, BA, Dip in Edu, M.Ed ( R )
Teacher



**G.M.Azam** (BA, NCPA)
Teacher



**R.Thowfeek**
BA ( Hons ), PGDE,MPhil ( R ), MED ( R )
Teacher



**F.M.Sahath**
Physical Science ( R )
Teacher



**Kaleel Jihath**
( Dip in Engineering , NCED )
Teacher



**Sarifdeen Anas** (Dip in Science)
Teacher



**A.M.Niflan**
**Physical Science ( R )**
Physical Science ( R )
Teacher



**Wahab Siraj** - B.A, M.A History (R)
Teacher



**K.M.M. Baasir** B.A / PGDE / M.A
Teacher

துணிந்தெழு
வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்
@skytamil.lk
மாதமிருமுறை | இதழ் - 16 | 08 நவம்பர் 2021



# சமூக பார்வை

**முஷ்பிகா முன்சிர் திஹாரிய**
**ஹாதியா கல்வி நிறுவனம்,**
**குருவிகொடுவ**

இன்றைய சமூகத்தில் விதவிதமாய் பிரச்சினைகள் முகம்கொடுக்கிறோம். சில பிரச்சினைகள் அடுத்தவர் பேச்சினை கேட்பதில் மட்டுமே இருக்கிறது எனலாம். உண்மையில் மனதளவில் பலவீனம் அடைந்தால் நிச்சயம் அவனால் சாதிக்க முடியாது இதுவே உண்மை. அது உடல் பலமுள்ள ஒருவராக இருந்தாலும் சரியே உடல் பலவீனமாக உள்ள நோயாளியாக இருந்தாலும் சரியே. வாசிப்பு தேடலில் கிடைத்த ஒரு கதை...

ஓர் ஊரில் மிகச் சிறந்த ஒரு ஓட்ட வீரன் இருந்தான். அவனை வெல்ல முடியாத அளவுக்கு திறமை சாலியாக இருந்தான். ஒருநாள் ஒரு போட்டி வந்தது. அதில் அவனுடன் ஒரு சிறந்த பயிற்றுவித்தல் பெற்ற ஒரு வீரன் போட்டியிட வந்தான். இந்த போட்டிக்காக இருவரும் பயிற்சி எடுத்தனர். போட்டியிட வந்த வீரன் தன்னால் வெற்றி பெற முடியாதோ என்ற பயத்தில் அவனின் நண்பனிடம் புலம்பியவாரு இருந்தான் அவனுடைய நண்பன் "உன்னால் முடியும் நீ முயற்சி செய் அவனை நான் பார்த்து கொள்கிறேன்" என்றான். நண்பனின் வார்த்தையில் அவன் உற்சாகமாக பயிற்சி எடுக்கச் சென்றான். போட்டி நடைபெறும் நாளில் சிறந்த போட்டி வீரனும் அவனுடன் போட்டியிட வந்தவனும் பயிற்சி செய்ய காலையில் ஓடிக் கொண்டு இருந்தனர்.

அவனின் நண்பன் சில பேரிடம் அவன் கூறும் வார்த்தைகளை மட்டும் செய்யுங்கள் என்று கூறினான். அவர்கள் பயிற்சி எடுத்த இருவரையும் இடை இடையில் சந்திக்க வந்தனர். சிறந்த ஓட்ட வீரனை பார்த்து ஒருவன் "இன்று என்ன உங்களுக்கு வழமைக்கு மாற்றமாக இருக்கிறீர்கள்" என்றான் அவன் அவன் கூறுவதை பெரிதாக எடுக்க வில்லை. இடையில் இன்னொருவன் "ஏன் இன்று ஓடுவதில் உயிரோட்டம் இல்லாது போல் ஓடுகின்றீர்கள்" என்றான்.

இதை கேட்ட அவனுக்கு ஏன் இப்படி கூறுகிறார்கள் என்று சிந்தனை சற்று சிந்திக்க தொடங்கி அவன் சிந்தனையுடன் ஓடத் தொடங்கினான். பின்னர் உம் ஒருவன் அவனை பார்த்து " என்ன நடந்தது உமக்கு?



உங்கள் பழைய உற்சாகம் எங்கே" என்றான். இதையும் கேட்ட அவனுக்கு குழப்பம் ஏற்பட்டு கடைசியில் போட்டியில் தோல்வியை அடைந்தான். அனைவரும் திகைத்தனர். அவனும் கவலை அடைத்தான் அன்றிலிருந்து அவன் சில பேச்சுக்கள் எம்மை பலவீன படுத்தும் என்று புரிந்தான். உள்ளம் முதலில் பலம் அடைய பயிற்சி செய்தான்.

இது கதை மட்டுமல்ல யதார்த்த உண்மை என்பது புரிந்து கொள்ள வேண்டும். இது போல் தான் யாராவது ஒரு நோய் ஏற்பட்டு இருந்தால் அந்த நோயாளியை பார்க்கச் செல்லும் பெயரிலும் அவர்களுக்கு ஆறுதல் என்ற பெயரிலும் அவர்களை மனதளவில் பலவீனம் அடைய செய்து விட்டே வருகின்றனர். உண்மையில் மனிதநேயம் என்பதை மறந்து வாழ்கின்றனர். சாதரணமாக உடலில் வைட்டமின் குறைபாடு ஏற்பட்டு அதை நிவர்த்தி செய்ய மருந்து குடித்துக் கொண்டு இருக்கும் ஒருவரின் மனக்குமுறல் நீங்களும் வாசித்து பாருங்கள்...

இதுதான் நெலம...

7மணிக்கி தான் விட்டமின் இருக்கு என்று நாங்க ஸ்கூல் காலத்துல படிச்சி இக்கோம் ஆனால் இது புது விஷயம் ஆ இருக்கே... என்று ஒரு கதை இக்கிரா தலையை காய வெக்கிற வேல என்று ஒரு கதை... காலைல நல்லா தூங்க ஏழுமே அதுதான் இப்பிடி ஒரு புதுவிசியம் செல்லி நிம்மதியா தூங்கிட்டு 11மணிக்கு எழும்பி வெயில்ல காயுற என்று ஒரு கதை... கதைக்கு மேல் கதை சொல்லுற எல்லாரும் மொதல்ல அவங்கடா விட்டமின் லெவல் அ செக் பண்ணனும்.

விட்டமின் லெவல கொறஞ்சா ஒடம்புல வித்தியாசம் காட்டத் தான் செய்யும் இனி இப்பிடி இருக்கும் போது "அப்பிடில்ல அத பாக்கணும் அதுல சொல்றது தான் உண்மை "(மூட நம்பிக்கை) எண்டெல்லாம் 1000 ஊகிப்பு சரிதான் வாய்காக சரி பெய்து பாப்பம் என்று போன இக்கிரா பொய் எல்லாம் சொல்லிக்கொண்டு மனசையே குழப்பி விட்டாச்சி.

என்னதான் பெரிய லெவல் கவுண்சலர் ஆக இருந்தாலும் 5 நோயாளிய பாத்த அவரும் ஒரு கொவுன்சளின் செய்யணும் ஏன் அவரும் மனிசன் தானே அவர்க்கும் லிமிட் தான் இக்கு. அது மாதிரிதானே ஒருத்தருக்கு நோய் வந்தா அத மூச்சுக்கு முண்ணூறு தடவ செல்லி செல்லி நோய் இல்லாம சொகமா இக்க வேண்டிய

ஆளேயே உண்மையா நோயாளி ஆக்கி விட்டுட்டு… "ஒன்னும் யோசிக்க வோணம் யோசின கூடினா தான் ஒங்களுக்கு எல்லாம் என்று இக்கிரா பிரச்சினைல ஒன்ன ரெண்ட செல்லி இதெல்லாம் தலைல போட வோணம் என்று சொல்லுற" (யோசின வார எல்லாம் வாய் இக்கிரா பலிக்கும் ஆறுதல் என்ட பேர் ல மனச குழப்புரது மட்டும் தான்)

மனசு கொழுப்பாம இருங்க என்று எல்லாருக்கும் வாயால செல்ல ஏழும் இவ்வளவு போராட்டம் இருக்கும் போது மனசு ஒரு நிலையா இருக்க என்றது பெரிய விசியம் தான். அதுலேம் அந்த வெறிய காட்ட ஏதாவது வழியாகத்தான் கோவம் ஏசுற எண்டெல்லாம் உணர்வு வெளியாகுது. இதே எங்க புரிய போகும். கொவுன்சலர்கே கவுன்சலின் செய்ய வேண்டி வார என்டா சாதாரணமா இக்கிரா எங்களுக்கு எந்த நெலமையா இக்கும்.

இதெல்லாம் பேசின டாக்டர் பாக்க போற ஒரு பக்கம்… மூட நம்பிக்கை பாக்க போற ஒரு பக்கம்… அடுத்து கவுன்சலர் பாக்க கூட்டிட்டு போகும்…

நோய் பாக்க போறது நன்மை என்டா நோயாளிய மனசாலா நோய் ஆக்கிடு வாரத விட போகாம இருந்து அவங்களுக்கு ஒரு துஆ கேக்குறதே பெரிய நன்மை.

இப்பிடி ஆதங்கம் இருக்கு என்று சென்னா இன்னம் 1000 கேள்விம் பேச்சும் வருமோ என்றும் மனசு செல்லுது.

மொத்ததுல கொஞ்சம் சரி புரிஞ்ஜி கொள்ள யாருமே இல்ல இதுதான் உண்மை. நோய் வரணும் என்று இறை நியதி இருந்தா அது வந்து தான் தீரும். அதுக்காக ஓஹ் இது தான் காரணம் தூக்கம் கூட… தின்னுற இல்ல… என்று என்னவோ இதால மட்டும் தான் நோய் வந்த மாதிரி அவங்களுக்கு மட்டும் தான் எல்லாம் தெரியும் மாதிரி பேசுற.

பழையத பேசி பேசி இக்கிரதுள தான் எல்லாமே… புதிசா என்ன தான் சொல்லுற… ஒன்னும் செல்ல இல்லாட்டி வாய் அ மூடிட்டு இக்கனும்

எப்படி போனாலும் ஒருத்தர்ட மன நிலைய புரிஞ்ஜி கொள்ளுறது தான் மனிசன் ஆனால் மனிசனா வாழத் தகுதி இல்லவே இல்ல.

மனசில் உள்ளத எல்லாத்தையும் கொட்ட முடியா விட்டாலும் ஒரு சில வரிகள் தான்…

இன்றைய இவ்வாறான 1000 மனகுமுறல் ஒவ்வொருவரிடமும் இருக்கிறது. சிறு வார்த்தைகளால் உள்ளதை புண் படுத்துவதை விட அமைதியாய் அவர்களுக்கு பிராத்தனை புரிந்து நல்ல ஆறுதல் வார்த்தைகள் கூற வேண்டும்.

(அனைத்தும் தெரிந்து தான் என்று கூறி விட்டு நடைமுறையில் இல்லாமல் இன்று பலர் வாழ்ந்து கொண்டு இருக்கிறனர் என்பதே கசப்பான உண்மை )



# துணிந்தெழு சஞ்சிகையே !





சஹீகா சாஜஹான்
மருதமுனை

பவனி வரும் சந்திரனாய்
துணிவு தரும் மந்திரமாய்
அறிவுசார் மஞ்சரியாய்
உலவுகிறாய் சஞ்சிகையாய்

திங்களிருமுறை மின்னிதழில்
தளைத்தெழுவாய் இணையிதழாய்
தலைதூக்கி நீ துணிந்தெழவே
தடைகளதை உடைத்தெறிந்தாய்

வாசிப்பை ஊட்டி எம்மை
பூரணமாக்கும் அற்புத சக்தியே
அறிவை ஈட்டி வாழ்வை
விருட்சமாக்கும் அதிசய இதழே

அறிவுப் பசிக்கு தீனி போடும்
எம் அறிவுக்களஞ்சியமே
அறிவுமதிக்கு பரிசுமழை குவிக்கும்
எம் அவனி முதல்வனே

மானிடர் சமூகத்தின்
மாண்புமிக்க உறுதுணையே
மறவாமல் எண்ணுகிறோம்
மறைந்திடாத உன்னை

கவியிதழ் நேசகரின் காதலனே
கவிக்கோர் இடமளித்த காவியமே
தினம் உனை நாம் கண்டிடவே
தவம் கொண்டு நிதம் ஏங்குவோமே

இவ்வுலகின் திருச்சுடராய் நீ
இன்னுயிராய் வலம் வரவே
திடம் கொண்ட திருவரமாய் நீ
துணிந்தெழு சஞ்சிகையே ...!



கவிமணி கவிநுட்பம்
பாயிஸா நௌபல்

# வாழ்த்துகள் சகோதரா

பாஸித் என்னும் அன்பு மகன்..
பைந்தமிழ் பலவும் கற்ற மகன்..
சாய்ந்த மருதுல் பிறந்த மகன்..
சத்திய உள்ளம் குவிந்த மகன்..!!

மீராசாஹிப் ஜெமீல், பாத்தும்மா
தம்பதியரின் மூத்த மகனாய்..
ஜோராகத்தான் பிறந்தார்..! –எந்தச்
சோகமும் இல்லா மனை தவழ்ந்தார்!

ஓயாத விளையாட்டில் நித்தம் ஆடித்
திரிந்தாலும்.. மாயாத அலையாக...
காயாக.. கனியாக.. கடுந்தவம் கொண்ட
சேயாக நாளும் வளர்ந்தார்!

அல்–கமறூன் பள்ளியிலே ஆரம்பக்
கல்வி, கல்முனை ஸாஹிறாக்
கல்லூரியிலே உயர்கல்வி பயின்று
தகவல் தொழில் நுட்பமும் முடித்தார்!

தொழில் நுட்பம் தொழிற் பயிற்சி
நிலையத்தில் பூர்த்தி செய்து..
டிஜிட்டல் துறையிலும் அசத்தும்
பயிற்சி பெற்று அறிவில் தேறினார்!

பல்கலை பலதும் அறிந்த மகன்..
சொல்கலை வித்தகம் தெரிந்த மகன்!
இணைய உலகம் உணர்ந்த மகன்..
ஈடில்லா திறமை நிறைந்த மகன்..!

கூரை ஏறி கோழி பிடிப்பா?
வானமேறி வைகுந்த இருப்பா..?
வானத்தேரில் ஏறி திரைகடல் கடந்தார்!
ஞானத்தேரிலேறி ஊருலகம் அளந்தார்!
கட்டார் மண்ணில் கலந்த மகன்
கணினித் துறையில் கனிந்த மகன்!
காண்போர் எல்லாம் வியக்கும் மகன்!
கிராபிக் கலையில் கறைந்த மகன்..!

கின்னஸ் சாதனைக்கு தகுந்த மகன்!
கீர்த்தி பல பெற்று வளர்ந்த மகன்!
எண்ணியதெல்லாம் முடித்த மகன்..
திண்ணிய நெஞ்சம் கொண்ட மகன்!

ஸ்கைதமிழ் என்னும் சமூக வலைதளம்
பொய்தகவல் இல்லா பொறுப்புடை களம்
துணிந்தெழு என்னும் தோகையர் இதழ்
துயரங்கள் கலையும் பாவையர் மலர்..!

துணிந்தெழு சஞ்சிகையால்
துடிப்பான இளைஞர் உலகம்..
அணிதிரண்டு எழுந்தது காண்
பணி செய்த பூமியாம் கத்தாரிலே!!

வியந்திடும் சாதனைகள் பல படைத்து
மகிழ்ந்திடும் உள்ளங்கள் தினம் வளர்த்து..
அணிதிரள் புகழொலியால் மனம் களித்து
அகிலமதை வென்றிடவே வாழ்த்துகிறேன்!!

## கேள்வி 01

**உங்களது பூர்வீகம் குறித்தும் கல்லூரி வாழ்க்கை பற்றியும் கூறுங்கள்.**

நான் பிறந்தது சப்ரகமுவ மாகாணத்தின், கேகாலை மாவட்டத்தில் 'மலை நாட்டின் தலை வாயில்' என்று செல்லமாக அழைக்கப்படும் இயற்கை எழில் கொஞ்சும் மாவனல்லை நகரில் தான் நான் பிறந்தேன். நான் ஆரம்பக்கல்வி முதல் உயர்தரம் வரை எமது ஊரின் பிரபல பாடசாலைகளுள் ஒன்றான பதுரியா மத்திய கல்லூரியில் கற்றேன்.

அதன் பின்பு உயர்தர விஞ்ஞானப்பிரிவில் கல்வி கற்ற நான் இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தில் Bsc in Management & Information Technology எனும் துறையில் என் பட்டப்படிப்பை பூர்த்தி செய்தேன். அத்துடன் பட்டப்படிப்பின் பின் கல்வி டிப்ளோமாவினை இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்திலும் பூர்த்தி செய்தேன்.

எனது பல்கலைக்கழக வாழ்க்கையைப் பற்றிக் குறிப்பிடுவதானால் எனக்கு பெரும்பாலான வாழ்க்கை அனுபவங்களைக் கற்றுத்தந்த கலாசாலை என்றே நான் குறிப்பிடுவேன். தென்கிழக்குப் பல்கலைக்கழக வாசிகசாலை என் வாசிப்புக்குத் தீனி போட்ட பிரதான இடம் என்றால் மிகையாகாது.



### ஆசிரியை, எழுத்தாளர்
# இன்ஷிராஹ் இக்பால்
### அவர்களுடனான நேர்காணல்



நேர்காணல்
**ஜே.எம்.பாஸித்**



## கேள்வி 02

### உங்கள் குடும்பப் பின்னணி பற்றிக் குறிப்பிடுங்கள்.

நான் பிறந்தது ஒரு இலக்கிய வாசனை கொண்ட ஒரு குடும்பத்தில் என்று தான் கூற வேண்டும். எனது தந்தை மௌலவி அல்ஹாஜ் ஏ.சீ.எம். இக்பால் மாவனல்லையைச் சேர்ந்தவர். அவர் ஒரு இலக்கிய ஆர்வலர் பதிப்பாளர். கடந்த வருடம் எங்களை விட்டு இறையடி சேர்ந்து விட்டார். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்.

எனது தாயார் தர்காநகரைச் சேர்ந்த சுலைமா சமி இக்பால். இவர் இதுவரை ஆறு இலக்கிய நூல்களைத் தந்த சிறுகதை, நாவலாசிரியர். இவர்களின் சிரேஷ்ட புதல்வியான எனக்கு ஒரு தங்கையும், ஒரு தம்பியும் இருக்கிறார்கள். எனது அனைத்து முயற்சிகளுக்கும் உறுதுணையாகவும், ஆணி வேராகவும் திகழ்வது எனது குடும்பமே.

என் திருமண வாழ்கைக்குப் பிறகு எனது அன்பான கணவன், அருமையான மாமியார், மைத்துனி என என் குடும்பத்தின் கிளைகள் இன்னும் விரிவடைந்துள்ளன.







## கேள்வி 03

## உங்களது தொழில் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள முடியுமா?

நான் பல்கலைக்கழகத்தின் இறுதிவருடத்தின் கடைசிப்பகுதியிலிருந்தே ஒரு பகுதி நேர ஆசிரியையாகக் கடமையாற்றத் தொடங்கி விட்டேன். ஆரம்பத்தில் மாவனல்லை ஆயிஷா சித்தீக்கா அரபுக் கலாசாலையில் ஒன்றரை வருடங்கள் IT Instructor ஆகப் பணியாற்றினேன்.

பின்னர் கண்டி அல்–இர்பான் சர்வதேசப் பாடசாலையில் சில மாதங்கள் கணித ஆசிரியையாகப் பணியாற்றினேன். அதன் பிறகு 2016 இல் எனக்கு ஆசிரிய நியமனம் கிடைத்து ஒன்றரை வருடங்கள் மாவனல்லை உயன்வத்தை நூராணியா மகா வித்தியாலயத்தில் கடமையாற்றினேன்.

அதே காலத்தில் Worldfocus College, Newman's College, Insight Bussiness college, Itec College ஆகியவற்றில் பகுதிநேர விரிவுரையாளராகவும் கடமையாற்றினேன். தற்போது காத்தான்குடி மீரா பாலிகா தேசிய பாடசாலையில் மூன்று வருடங்களாக ஆசிரியையாகக் கடமையாற்றி வருகிறேன்.

எனது தொழில் அனுபவம் குறுகிய காலமாக இருந்தாலும், இலங்கையின் பல்வேறு பிரதேச, பலதரப்பட்ட, பல்லின மாணவ, மாணவியர்களுக்குக் கற்பிக்கும் வாய்ப்புக் கிடைத்தமையைப் பெரிய பேறாகக் கருதுகிறேன்.

என்னைப் பொருத்தவரையில் ஆசிரியைப்பணி என்பது ஒவ்வொரு நாளும் நம்மை நாமே செதுக்கிக்கொள்ள, புதியதை உருவாக்க, வாழ்நாள் கற்போனாக மீதி வாழ்க்கையை வாழ்வதற்குக் கிடைத்த உன்னத பணியாகும். மாணவர்களை உளவியல் ரீதியாகப் புரிந்து கொண்டு அவர்களுடன் பணியாற்றுவது என்றுமே உள்ளத்தைப் புத்துணர்வாக வைத்திருக்கின்றது.

Covid-19 போன்ற இந்த சவாலான காலகட்டத்திலும் நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி அவர்களைக் கற்றலில் ஈடுபாடாக வைத்திருக்கும் நுட்பங்களை இன்னும் புதிது புதிதாகக் கற்றுக்கொண்டிருக்கிறேன் என்ற வகையில் நானும் இன்னும் மாணவியே.



## கேள்வி 04

### எழுத்துத் துறைக்கு உங்களை வரத் தூண்டிய விஷேடக் காரணிகள் ஏதும் உள்ளனவா?

சிறுவயதிலிருந்தே எனக்கு கதை கேட்பதிலும் கதை சொல்வதிலும் நிறைய ஆர்வம் இருந்தது. எனது தாயார் ஒரு சிறுகதை எழுத்தாளர் என்பதால் என் கதைப்பசிக்கு வீட்டிலேயே நல்ல தீனி இருந்தது என்று தான் சொல்ல வேண்டும். எனது வீட்டில் ஏராளமான புத்தகங்கள் இருக்கின்றன. எனது தந்தையும் நான் சிறு வயதிலிருந்தே பரிசுப் பொருட்களாக புத்தகங்களை வாங்கித்தந்தே ஊக்குவிப்பார்.

சிறு வயதிலிருந்தே வாசிக்க வேண்டும் என்ற வேட்கை என்னுள் இருந்து கொண்டே இருந்தது. எனக்கு இன்னும் நினைவிருக்கிறது எனக்கு ஒன்பது வயதிருக்கும் போது சுகவீனமுற்று வீட்டில் இருந்த போது என் கண்ணில் ஏற்பட்ட உபாதை காரணமாக என்னால் வாசிக்க முடியவில்லை. அப்போதும் என் தாயாரை சத்தமாக வாசிக்கச் சொல்லி கேட்டுக் கொண்டிருப்பேன். அந்தளவுக்கு எனக்கு அந்நாட்களிலேயே வாசிப்பின் மீதான நேசம் இருந்தது. சிறுவயதிலிருந்தே வாசிப்பில் ஏற்பட்ட ஆர்வமும், எனது வீட்டுச் சூழலும், எனது பெற்றோரின் ஊக்குவிப்பும் என்னை எழுத்துத் துறைக்கு வரத்தூண்டியது என்பதே என் ஆழமான நம்பிக்கையாகும்.





## கேள்வி 05

### எப்போது, எந்த வயதிலிருந்து எழுத்துத் துறையில் ஈடுபட ஆரம்பித்தீர்கள்? நீங்கள் வெளியிட்ட புத்தகம் பற்றிச் சொல்லுங்கள்?

நான் பத்து வயதிலிருந்தே சின்னஞ்சிறுவர்களுக்கான சிறு கதைகளைத், துணுக்குகளை எனது டயரிக்குறிப்புகளில் எழுத ஆரம்பித்து விட்டேன். ஆனால் எனது முதலாவது எழுத்துக்கான அங்கீகாரம் 2003ம் வருடத்தில் எனது பன்னிரன்டாவது வயதில் கிடைத்தது. 2003 இல் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் முஸ்லிம் மஸ்ஜிதினால் நடாத்தப்பட்ட அகில இலங்கை ரீதியான இஸ்லாமிய தின சிறுகதைப்போட்டியில் அகில இலங்கை ரீதியில் இரண்டாமிடம் பெற்றேன். அது எனக்கு எழுதுவதற்கு பெரிய உந்துதலைத் தந்தது. அதன் பின் பத்திரிகைகளுக்கு, தமிழ்த்தின, மீலாத்தின, சிறுவர்தின சிறுகதைப் போட்டிகளுக்கு ஆண்டு தோறும் எழுத ஆரம்பித்தேன்.

2005 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 24ம் திகதி எனது "மலையை அசைத்த மலர்" என்ற சிறுகதை முதல் ஆக்கமாக நவமணியில் பிரசுரமானது. அப்போது எனக்குப் பதினான்கு வயது. அந்தச்சிறுகதை 2004ம் ஆண்டு முஸ்லிம் கலாசாரத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட தேசிய மீலாத் போட்டியில் முதலிடம் பெற்ற கதையாகும். இதுவரை நான் இரண்டு நூல்களை வெளியிட்டிருக்கிறேன். எனது முதலாவது நூலான "பூ முகத்தில் புன்னகை" என்னும் சிறுகதைத் தொகுதி 2009 இல் வெளியானது. அப்போது நான் உயர்தர விஞ்ஞானப்பிரிவில் கற்றுக் கொண்டிருந்தேன். அந்த நூலில் அதுவரை தேசிய, மாகாண ரீதியில் பரிசு பெற்ற சிறுகதைகளைத் தொகுத்து வெளியிட்டிருந்தேன்.

எனது இரண்டாவது படைப்பான "நிழலைத் தேடி" சமூக நாவல் 2014 இல் எனது பல்கலைக்கழகக் காலத்தில் இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் தமிழ்ச் சங்க வெளியீடாக வெளியானது. இந்நாவல் உயர் கல்வி அமைச்சினால் நடாத்தப்பட்ட கவிதா டெலன்ட் போட்டியில் தேசிய ரீதியில் முதலிடமும் விருதும் பெற்றமை குறிப்பிடத்தக்கது.







**கேள்வி 06**

## புத்தக வெளியீட்டு விழா பற்றிய ஞாபகங்களை பகிர்ந்து கொள்ள முடியுமா..?

எனது முதல் புத்தகமான 'பூ முகத்தில் புன்னகை' சிறுகதை நூலானது 2009ம் ஆண்டு மாவனல்லை பதுரியா மத்திய கல்லூரியின் பிரதான மண்டபத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு கல்லூரியின் அதிபர் எம்.ஜே.எம். நயிமுத்தீன் அவர்கள் தலைமை தாங்கினார்கள். இவ்வைபவத்தில் மிலேனியம் கல்வி ஸ்தாபனத்தின் தலைவர் எஸ். எச். மௌலானா அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டதோடு அவர் இந்நூலின் 100 பிரதிகளைக் கொள்வனவு செய்தமையும் குறிப்பிடத்தக்கது. கருத்துரையை கலாபூஷணம் திக்குவல்லை சப்வான் அவர்களும், நூலாய்வினை கலாபூஷணம் கலைவாதி கலீல் அவர்களும் நிகழ்த்தியமை குறிப்பிடத்தக்கது. இந்நூல் வெளியீட்டு விழாவின் போது நூலைக் கொள்வனவு செய்த பலரும் எனக்குக் கடிதங்கள் அனுப்பி எனக்கு வாழ்த்துத் தெரிவித்தமை என்னால் மறக்க முடியாத நிகழ்வாகும்.

என் இரண்டாவது புத்தகமான 'நிழலைத்தேடி – சமூக நாவல்' இன் வெளியீட்டு விழாவானது 27.03.2014 அன்று தென்கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழி பீட கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி எஸ்.எம்.எம். இஸ்மாயில் அவர்கள் கலந்து கொண்டார்கள். நூலின் முதல் பிரதியை சம்மாந்துறை அரோமாஸ் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் எம்.எஸ்.எம். அஸாருதீன் அவர்கள் பெற்றுக் கொண்டார்கள். நூலாய்வுரையை தென்கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறைத் தலைவர் கலாநிதி. றமீஸ் அப்துல்லாஹ் நிகழ்த்தினார்.

மேலும் எழுத்தாளர்களான உமா வரதராஜன், கவிஞர்களான அன்புடீன், பாலமுனை பாறூக், முழுமதி எம் முர்தலா, மருதமுனை அலறி, றகுமான் ஏ. ஜமீல் உள்ளிட்ட பிரதேச இலக்கியவாதிகளும் பல்கலைக்கழக பீடாதிபதிகளும், விரிவுரையாளர்களும் மாணவர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் தென்கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி சபீனா எம்.ஜி. ஹசன் பொன்னாடை போர்த்தி என்னை கௌரவித்தது என்னால் மறக்க முடியாத நிகழ்வாகும்.

இவ்விரண்டு புத்தக வெளியீட்டு நிகழ்வுகளும் என் தந்தையின் உழைப்பின்றி சாத்தியமின்றி நிகழ்ந்திருக்க வாய்ப்பேயில்லை. அந்தளவு எனது தந்தை என் எழுத்துப் பணிக்கு பின்னின்று உழைத்தவர் என்பதை இச்சந்தர்ப்பத்தில் கண்ணீருடன் நனைவு கூர்வதைப் பெறுமையாகக் கருதுகின்றேன்.



**கேள்வி 07**

## உங்களின் சேவைகளைப் பாராட்டி விருதுகள் கிடைத்துள்ளனவா? அது பற்றிக் குறிப்பிடுங்கள்.

பாடசாலையில் கற்கும் போதே நான் நிறைய தமிழ்த்தினப் போட்டிகள், ஆங்கில தினப் போட்டிகள், மீலாத்தினப்போட்டிகள், சாகித்திய விழாப் போட்டிகள், இதர போட்டிகளில் கலந்து கொண்டு கவிதை, கட்டுரை, சிறுகதை, விவாதம் போன்ற பிரிவுகளில் நிறையப் பரிசுகள் வாங்கியிருக்கிறேன்.

குறிப்பிட்டுச் சொல்வதானால் எட்டாந்தரத்தில் கல்வி பயின்ற போது பேராதனைப் பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிஸ் நடாத்திய தேசிய ரீதியான சிறுகதைப் போட்டியில் இரண்டாமிடமும், 2006ம் ஆண்டு கொழும்புப் பல்கலைக்கழகம் நடாத்திய உலக சிறுவர் தின சிறுகதைப் போட்டியில் முதலாமிடமும், 2008 இல் சாகித்திய விழாப்போட்டியில் தேசிய ரீதியில் இரண்டாமிடமும், முஸ்லிம் சமய கலாசாரத் திணைக்களம் நடத்திய தேசிய மீலாத் போட்டிகளில் முதலாமிடமும் பெற்றேன்.

அது மட்டுமில்லாமல் உயர்கல்வி அமைச்சு 2012ம் ஆண்டு நடாத்திய கவிதா டெலன்ட் போட்டியில் எனது “நிழலைத் தேடி” நாவல் முதலிடமும் விருதும் பெற்றது எனக்கு மறக்க முடியாத நிகழ்வு. 2014 இல் அதே நிகழ்வில் எனது சிறுகதைத் தொகுப்புக்கு ஆறுதல் பரிசும் கிடைத்தமை குறிப்பிடத்தக்கது.

எனது எழுத்துக்காக நான் 50 இற்கும் மேற்பட்ட போட்டி நிகழ்ச்சிகளில் பதங்கங்கள், சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளேன். 2016 டிசம்பரில் இஸ்லாமிய இலக்கியப் பொன்விழாவை முன்னிட்டு கொழும்பு இலங்கை மன்ற மண்டபத்தில் நடத்திய உலக இஸ்லாமிய இலக்கிய தமிழ் மாநாட்டில் எனது இலக்கியப் பங்களிப்பை கௌரவித்து எனக்கு விருது வழங்கப்பட்டது.


ஆண்டு தோறும் தேசிய ரீதியில் இன ஒற்றுமையை வலியுறுத்தும் விதமாக கொழும்பு 07 மகாவலி விதமாக கேந்திர நிலையத்தில் நடைபெற்ற சிங்கள, தமிழ் கவிஞர்களின் 26 ஆவது ஒன்றுகூடலில் அகில இலங்கை கவிஞர்களின் சம்மேளத்தினால் ‘காவியப் பிரதீப’ பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டேன்.


## கேள்வி 08

### குறும்பட இயக்குனராக இருந்து நீங்கள் வெளியிட்ட படங்கள் பற்றி பகிர்ந்து கொள்ள முடியுமா?

நான், எனது தம்பி அஷ்பாக், எனது கணவர் சகீல் உடைத் மற்றும் குழுவினரால் ஸ்தாபிக்கப்பட்டதே எமது Acmi Studio Youtube தளமாகும். இதில் நாங்கள் எங்களால் முடிந்த வளங்களையும் தொழில்நுட்பங்களையும் பயன்படுத்தி குறும்படங்கள், வீடியோக்கள் வெளியிடுவதற்காக முயற்சிகளை மேற்கொண்டோம். அந்த வகையில் 2019ம் ஆண்டு எனது கதையான 'சப்பாத்து' என்னும் கதையை குறுந்திரைப்படமாகத் தயாரித்தோம். இது பலரின் மத்தியில் பாராட்டைப் பெற்றது. அதன் பின்பு 2020 இல் எனது தாயாரால் எழுதப்பட்ட சிறுகதையான 'உண்டியல்' இனை குறுந்திரைப்படமாக இயக்கினோம். அதே போல் 2020இல் கொரோனாவை மையமாகக் கொண்ட 'நான் வீழ்வேனென்று நினைத்தாயோ?' என்னும் குறுந்திரைப்படத்தை வெளியிட்டோம்.

இவ்வருடம் 'மாற்றம்' என்ற பெயரில் இஸ்லாத்தின் கடமைகளுள் ஒன்றான தொழுகையைக் களமாகக் கொண்ட குறுந்திரைப்படத்தை எடுத்தோம். இவ்வாறு எமது இம்முயற்சிகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. எமது தளத்தினைப் பார்வையிடும் பலரும் எமது வீடியோக்களின் தரமும், Editing, Cinematography போன்றவை மிக நன்றாக இருப்பதாகப் பாராட்டி வருகின்றார்கள். இந்த பாராட்டுக்கள் அனைத்தும் என் தம்பி அஷ்பாக்கினையே சேரும்.




## கேள்வி 09

### உங்களுக்கு வேறு துறைகளிலும் ஏதாவது ஈடுபாடு உண்டா..?

எனக்கு நான் மேலே குறிப்பிட்டது போன்று Video Making, Content Creating, Blogging, Vlogging போன்ற துறைகளில் ஈடுபாடு உள்ளது. ஆனால் தொடர்ந்த வேலைப்பளுக்களின் காரணமாக என்னால் இவற்றில் முழுமையான பங்களிப்பைச் செலுத்த முடியாதுள்ளது. எதிர்காலத்தில் இவற்றில் நான் கவனம் செலுத்த முயற்சி செய்வேன். இன்ஷா அல்லாஹ்.



## கேள்வி 10

**உங்கள் வாழ்வில் மறக்க முடியாத சம்பவங்கள் இருக்கும். அவற்றில் முக்கியமானதைக் குறிப்பிட முடியுமா...?**

என் வாழ்வில் மறக்க முடியாத ஏராளமான சம்பவங்கள் இருக்கின்றன. அவை என் எழுத்து வாழ்க்கையுடன் சம்பந்தப்பட்டவை, திருமண வாழ்க்கை தொடர்பானவை, தொழில் வாழ்க்கை தொடர்பானவை என மறக்க முடியாத சம்பவங்கள் ஏராளமானவை.

அதில் குறிப்பிட்டுச் சொல்வதானால், எனது இரு புத்தக வெளியீடுகள், 2012 இல் நெலும்பொகுணவில் இடம்பெற்று நேத்ரா அலைவரிசையில் நேரடி ஒளிபரப்புச் செய்யப்பட்ட 'கவிதா டெலன்ட்' பிரமாண்ட நிகழ்வில் மேடையில் வைத்து எனக்கு முதலாமிடம் என்று அறிவிக்கப்பட்ட அந்தத் தருணம் என்னால் மறக்கவே முடியாது. இப்போது நினைத்தாலும் மெய்சிலிர்த்துப் போவேன். அந்நிகழ்வின் பின் என் கையடக்கத்தொலைபேசி வாழ்த்துச் செய்திகளாலும், அழைப்புக்களாலும் நிரம்பி என்னை மகிழ்ச்சியில் திக்குமுக்காடச் செய்த தருணமாகும்.

அத்துடன் என் வாழ்வில் மிக முக்கியமான ஒரு தருணமாக என் காதல் கணவனைக் கரம்பிடித்த அந்தத் தருணத்தை எப்போதும் நினைவு கூர்வேன்.











## கேள்வி 11

### உங்கள் தாய் ஒரு எழுத்தாளர் அவர்களை பற்றி பகிர்ந்து கொள்ள முடியுமா?

எனது தாயார் சுலைமா சமி இக்பால் அவர்கள் 40 வருடங்களாக இலக்கியப்படைப்புலகில் கவிதை, சிறுகதை, நாவல், கட்டுரைகள் என பல்துறைசார் எழுத்துக்களை எழுதி நான்கு தசாப்த கால இலக்கியத் தொடர்ச்சியினையும் அதன் மீதான ஈடுபாட்டையும் கொண்டிருக்கிறார். எனது தாய் தர்காநகரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் இலங்கை வானொலியின் மாதர் மஜ்லிஸ் நிகழ்ச்சியின் முக்கியப் பிரதித் தயாரிப்பாளராகவும் இருந்து வந்துள்ளார். எனது தாயார் பல்வேறு பிரதேச, மாவட்ட, மாகாண, தேசிய, சர்வதேச ரீதியில் நடத்தப்பட்ட போட்டிகளிலும் கலந்து கொண்டு பரிசில்களையும் பதக்கங்களையும் விருதுகளையும், பட்டங்களையும் பெற்றுள்ளார். இதுவரையில் வைகறைப்பூக்கள் (1987), மனச்சுமைகள் (1988), திசைமாறிய தீர்மானங்கள் (2003), ஊற்றை மறந்த நதிகள் – நாவல் (2009), நந்தவனப்பூக்கள் (2015), உண்டியல் (2018) ஆகிய 6 படைப்புக்களை இலக்கிய உலகிற்குத் தந்துள்ளார்.

எனது தாயாரின் அனைத்து முயற்சிகளுக்கும் மிகவும் பக்க பலமாகத் திகழ்ந்தவர் எனது தந்தை மர்ஹூம் ஏ.சி.எம். இக்பால் அவர்கள் என்றால் மிகையாகாது.



## கேள்வி 12

### இறுதியாக நீங்கள் வாசகர்களுக்கு ஏதாவது பகிர இருப்பின் குறிப்பிடலாம்.

பலரும் சொல்வது போல ஒரு படைப்பாளியின் சிந்தனை பரந்ததாக இருக்க வேண்டும். வாசகர்கள் இருக்கும் வரை தான் எழுத்தாளர்களுக்கு மதிப்பு இருக்கும். இன்னும் பல சுதந்திரப்போக்குள்ள பெண் படைப்பாளிகள் நம்மிலிருந்து உருவாக வேண்டும். பேசப்படாத நிறைய விடயங்கள் பேசப்பட வேண்டும். எழுதப்பட வேண்டும். வாசிப்புத்தளம் விரிவு படுத்தப்பட வேண்டும். “நிறைய வாசியுங்கள். குறைவாக எழுதுங்கள்.” இதனையே நான் என் வாசகர்களுக்குச் சொல்வேன்.





## கேள்வி 13

### நீங்கள் துணிந்தெழு நிகழ்ச்சியை எவ்வாறு பார்க்கிறீர்கள்.?

உண்மையில் துணிந்தெழு நிகழ்ச்சியானது மிகவும் காத்திரமான நிகழ்ச்சியாகும். இது பல பெண் ஆளுமைகளைப் பற்றிப் பேச, கலந்துரையாட, வெளிக்கொணரச் சந்தர்ப்பம் வழங்குகின்றது.

இது பல பெண்களை ஊக்குவிப்பதாகவும், தைரியம் கொடுப்பதாகவும், துணிந்தெழச் செய்வதாகவும், அங்கீகரிப்பதாகவும் அமைகின்றது. இதன் தயாரிப்பாளர் ஜே.எம். பாஸித் அவர்களுக்கும், இதனைச் சிறந்த முறையில் தொகுத்து வழங்கும் நுஸைலா பதுர்தீன் சகோதரிக்கும், ஸ்கை தமிழ் உறுப்பினர் இற்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு என்னையும் இந்நிகழ்வில் ஒரு பங்கேற்பாளராகப் பங்கு பெறச் செய்தமைக்கு என் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இக்காத்திரமான பணி தொடர வேண்டும் என வாழ்த்துகிறேன்.

## கேள்வி 14

### இந்த நேர்காணலினூடாக விஷேடமாகக் கூற விரும்பும் செய்திகள் என்ன?

இன்று இலங்கையில் பத்திரிகைகள், சஞ்சிகைகள் ஊடாகவும் சமூக வலைத்தளங்கள் ஊடாகவும் நிறைய இளம் படைப்பாளிகள் உருவாகிக் கொண்டு இருக்கின்றார்கள் என்பது ஒரு ஆரோக்கியமான விடயமே.

ஆனால் தம்மை ஒரு தரமான படைப்பாளியாக அடையாளப்படுத்துபவர்கள் இலங்கையின் இலக்கியப் போக்கில் எவ்வாறான மாற்றத்தை ஏற்படுத்தப் போகின்றார்கள் என்பதே முக்கியமானது. இவர்களின் படைப்புக்கள் பெரும்பாலும் சமகாலப்பிரச்சினைகள் அல்லது புனையப்பட்ட கற்பனை வடிவங்களாக பல்வேறு தரநிலைகளில் வெளிப்படுகின்றது. இவ்வாறு ஒரே பாணியிலான படைப்புக்களை வெளியிடும் ஈழத்து இலக்கிய உலகம் அதன் பாரம்பரியக் கட்டுக்களை உடைத்துக் கொண்டு புதிய சிந்தனைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் படைப்புக்களைத் தர வேண்டும்.

ஆனால் இன்று இவ்வாறு புதிய சிந்தனைப் போக்குள்ள பல இளம் எழுத்தாளர்கள் உருவாகியிருப்பது மனமகிழ்ச்சியைத் தரும் விடயமாகும்.



# லேக் ரவுண்ட் - கண்டி



முஸ்லிஹா முஸ்தபா
பேராதனை கல்வியற் கல்லூரி வளாகம்.

அந்த அருமையான காலைப் பொழுதில் ஆதவன் கண்களைப் பாதி திறந்து தரணியை எட்டிப் பார்க்கிறான் அந்தப் பார்வையில் வெட்கப்பட்டு தாமரை மலர்கள் தம் பார்வையை தாமாகவே தாழ்த்திக் கொள்கின்றன இவை எதனையும் காணாதது போல் நடிக்கும் தங்க மீன் கூட்டம் ஒன்று அப்படியே நீருக்குள் மூழ்கி விடுகின்றது.

கூடவே பாதையோரத்தில் சாடிகளில் வைக்கப்பட்டிருக்கும் சிவப்பு,மஞ்சள், நீல, ஊதா நிறங்களிலுள்ள கடதாசிப் பூக்கள் மெல்ல அடிக்கும் தென்றல் காற்றிற்கு வந்தனங்கள் சொல்வது போல் மெல்ல தலையசைக்கின்றன.

காதுகளில் ஹெட்செட் மாட்டிக் கொண்டு ஜொகிங் செய்யும் இரண்டு இளைஞர்கள் குளமிருக்கும் வளாகத்தை அடைந்தவுடன் தாமாக வேகத்தைக் குறைத்துக் கொள்கின்றனர்.

பாதாசாரிகளோ தத்தம் உலகங்களில் சஞ்சரித்துக் கொண்டிருக்கின்றனர்.
சிலர் ஸ்மாட் போன்களுடன்
சிலர் ஹெட்செட்களுடன்
சில பெண்கள் சாரி அணிந்து கைகளில் பைகளுடன் சில கருப்புத் தொப்பி அணிந்த வெள்ளைக் காரர்கள் கெனோன் கெமராக்கலுடன் "ஸன்ரைஸ்" போட்டோ எடுப்பதற்காயிருக்க வேண்டும்.

அவர்களுக்கு இடையில் கண்டியன் உடுத்திய ஒரு ஜோடு ப்ரீசூட்டுக்காக போஸ் கொடுத்துக் கொண்டிருக்கின்றனர்.

நான் அப்படியே பார்வையை கொஞ்சம் எதிர்ப்பக்கம் நீட்டுகின்றேன்
வெள்ளச் சட்டையும் வெள்ளச் சப்பாத்தும் போட்ட மாணவர் கூட்டமொன்று எதையெதையோ சொல்லி சிரித்துக் கொண்டு அவ்விடத்தை கடந்து விடுகின்றனர்.

பக்கத்திலிருக்கும் பெரிய ஆலமரத்தில் இருந்து விழும் காக்கா எச்சத்தை நச்சரித்துக் கொண்டே வெள்ளை சேட் அணிந்திருந்த இளைஞன் குழாய் அடிக்கு அவசரமாக விரைகிறான்.

தொடரவே "நங்கி டக்காலா நகிடின்ன" என்ற சத்தத்திற்கு திடீரென உசாராகி விடுகிறேன். உடல் பேரூந்தில் பயணித்தாலும் உள்ளம் இன்னும் ஐந்து நிமிடம் இருக்கலாமே என்று சொல்கிறது.

# என் புதிய வாழ்க்கை தத்துவங்கள்



யாரும் நிரந்தரமில்லை என்பதை நான்
உணர்ந்தபின்
என்னை நானே
நேசித்துக்கொள்கின்றேன்
என்னை நானே நலம் விசாரித்துக்
கொள்கின்றேன்.
என்னை நானே கவனித்துக்
கொள்கின்றேன்.

அதனால் பித்தாகிப் பிதற்றுகின்றேன்
என்றோ சுயநலம்
பிடித்துத்திரிகின்றேன் என்றோ
அர்த்தப்படுவதில்லை.

யாரும் உதவிகேட்டால் செய்து
தருகின்றேன்.
யாரும் புன்னகைத்தால் பதிலுக்கு
புன்னகைத்து விடுகின்றேன்.
நலமா?எனக்கேட்டால்
“ நலம் “ என்பதாய்
முடித்துக்கொள்கின்றேன்.
“போ“என்றால் போய்விடுகின்றேன்.
அங்கேயே நின்று அழுது மண்டியிட்டுக்
கொண்டிருப்பதில்லை.

அன்றோ நான் உறவுகளின் அருமை
தெரியாதவள் ஆகிவிடாது.அளவோடு
பழகுதல் எனும் புதிய உத்தியில் என்
உறவுகளைப் புதுப்பித்துக்
கொண்டிருக்கின்றேன்.
அவ்வளவே!!

யார்மேலும்,
அதிகம் அக்கறையுமில்லை
அதிகம் வெறுப்புமில்லை
அதிகம் நலம் விசாரிப்புக்களுமில்லை.
அதிகம் அன்புமில்லை
அதிகம் அழுகையுமில்லை.

என் புதிய அணுகுமுறையில்
அடுத்தவரைக்காட்டிலும் என்னில்
அதிகம் அக்கறை செலுத்திக்
கொள்கின்றேன்.
அதனால் நான் பித்தனுமில்லை
சுயநலவாதியுமில்லை.



அம்னா நசுர்தீன்
பொத்துவில்



## சிங்களவர், தமிழர், இஸ்லாமியர் என்ற பாகுபாடு இன்றி நாட்டிலுள்ள எல்லா ஆசான்களும் ஒரு குலம்தான்

# இலங்கை ஜனநாயக ஆசிரியர் சங்கத்தின்

## தேசிய தலைவர் கமால்தீன்

கிழக்கில் உதிக்கும் சூரியனும் பதினைந்தாம் நாள் சந்திரனும் இருண்ட பூமிக்கு இருள் அகற்றி ஒளியூட்டுவதற்கு புறப்பட்டது போல் வடக்கு – தெற்கு, கிழக்கு – மேற்கு என்று திசையில்லாது சிங்களவர், தமிழர், இஸ்லாமியர் என்ற பாகுபாடு இன்றி நாட்டிலுள்ள எல்லா ஆசான்களும் ஒரு குலம்தான் மேலும், கடந்த காலத்தில் ஆசிரியர் சங்கங்கள் வடமாகாண ஆசிரியர் சங்கம், தென்மாகாண ஆசிரியர் சங்கம், மேல்மாகாண ஆசிரியர் சங்கம், கிழக்கு மாகாண ஆசிரியர் சங்கம் என்றும் இனரீதியாக பௌத்த ஆசிரியர் சங்கம், தமிழர் ஆசிரியர் சங்கம். இஸ்லாமியர் ஆசிரியர் சங்கம் எனவும் பாடரீதியாக பட்டதாரி ஆசிரியர் சங்கம், பயிற்றப்பட்ட ஆசிரியர் சங்கம், பயிற்றப்படாத ஆசிரியர் சங்கம், ஆங்கில ஆசிரியர் சங்கம், அதிபர் சங்கம் எனச் சொல்லி ஆசிரியர் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டதால் வகைக்குழறுபடியும் இன ரீதியான விரிசல்களும் ஏற்பட்டதன் விளைவாக ஆசிரியர் சமூகத்துக்குள் போட்டி மனப்பஸான்மையுடன் பொறாமையுள்ள சமுதாயமாக மாறிவிட்டது.

இதன் காரணமாக மூவின மக்களையும் இணைத்து முறுகல்களையும் போட்டி மனப்பான்மையையும் கழைந்து எல்லோரும் ஒருகுலமே ஒருவனே தெய்வம் என்ற ஆன்மீகத் தத்துவத்தை வெளிப்படும் வகையில் உருவாக்கப்பட்டது தான் இலங்கை ஜனநாயக ஆசிரியர் சங்கம். 1994 ஒக்டோபர் 6ம் திகதி உலக ஆசிரியர்

தினத்தன்று ஆசிரியர் சேவையும், அதிபர் சேவையும் கொண்டுவந்ததால் ஏற்பட்ட சம்பள முரண்பாடு, 1990ம் ஆண்டு நியமனம் பெற்ற 35,000 பயிலுனர் ஆசிரியர்களும் 1992இல் நியமிக்கப்பட்ட சுமார் 15,000 தொண்டர் பயிலுனர்களும், பட்டதாரிப் பயிலுனர்களும் சேவைக்கு உட்படுத்தும் போது சுமார் 4 வருடங்கள் புறந்தள்ளப்பட்டதால் ஏற்பட்ட தாக்கத்தின் விளைவாக இருண்ட பூமிக்கு ஒளிபரப்ப கிழக்கில் இருந்து புறப்பட்டது இவ் ஆசிரியர் சங்கம்.





மேலும், இதன் தோற்றம் நிந்தவூர் கமு/கமு/அல் – மஸ்ஹர் பெண்கள் உயர் தரப் பாடசாலையில் 2002.11.19ம் நாள் சுமார் 250இற்கு மேற்பட்ட ஆசிரியர்கள், ஆசிரியைகளை உள்ளடக்கி அம்பாறை மாவட்ட பாதிக்கப்பட்ட ஆசிரியர் சங்கம் என்றும் பின்பு பாதிக்கப்பட்ட பயிலுனர் ஆசிரியர் சங்கம் என்றும் உருமாற்றம் பெற்று அதன் பிறகு தேசிய ரீதியாக முழு நாட்டுக்கும் கிழக்குச் சூரியன் மேற்கை நோக்கி பயணிக்கப்புறப்பட்டது போல் எல்லாத் திசைகளுக்கும் ஒளி கொடுக்க வடிவமைக்கப்பட்டது இவ்வமைப்பு.




ஸ்தாபகர்கள் 25 பேர்களிலும் முன்னின்று உழைத்ததன் விளைவாக எனக்குக் கிடைக்கப்பெற்றது ஸ்தாபகத் தலைமை. அன்று தொட்டு இன்றுவரை சாதி, மத, பேதம், நிறம் என பாகுபாடின்றியும் பொய், பொறாமை பேதமின்றி ஆற்றிய சேவைக்கு கிடைத்தது வாழ்நாள் முழுவதும் இவ்வுலகில் வாழும்வரை இதன் தலைமைப் பதவி முதன்மை ஸ்தாபகருக்கு இனியொரு நாளும் பதவியிறக்கப்படாது மற்றவர்களின் பதவி மாறி வரும். இவ் யாப்பும் அப்படித்தான்.



1995.10.02 இல் இருந்து பலவடிவங்களில் பவணி





வந்த இவ்வமைப்பு தொழிற்சங்க ஆணையாளரினால் 2004 ஜுன் 21ம் நாள் இதன் பிறப்பு. 7345 இலக்கத்திற்கு இற்கு இனியொரு காலமும் இன்ஷா அல்லாஹ் இறப்பே இல்லை. ஜுன் மாதத்தின் 21ம் நாளின் 10 மணி சூரியன் அமாவாசை தினத்திற்கு முந்திய நாளின் சந்திரனுக்கு ஒரு போதும் அடிபணியப்போவதில்லை. இருண்டு கிடந்த பூமிக்கு சூரியன் நடத்திய சுற்றுலா போன்று அதிபர்களும் ஆசிரியர்களும் அவமானப்பட்டதற்கு ஆற்றுப் படுத்தக் கிடைத்தது தான் இதன் சேவை.

பயிலுனர் ஆசிரியர்கள் மட்டுமன்றி பட்டதாரிப் பயிலுனர்கள் பதவி உயர்வு பெறுவதற்கு பாடுபட்டதுதான் வரலாறு. மட்டுமின்றி தொண்டர் ஆசிரியர்கள் நிரந்தர நியமனம் கிடைக்க உழைத்ததும், கடமை நிறைவேற்று அதிபர்கள் நிரந்தர சேவைக்கு உட்படுத்துவதிலும் முஸ்லிம் பாடசாலைகளில் தேசிய மீலாது விழாவை பிரகடனப் படுத்துவதிலும் பரீட்சைக் கடமைகளுக்குச் செல்லும் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் சிற்றூழியர்களுக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவை அதிகரிக்க உழைத்தமையும் மேலும் பரீட்சைகளில் ஏற்படும் பிழைகளுக்கு அமைச்சையும் பரீட்சை ஆணையாளரையும் கண்டித்த வரலாறும் எமக்கு உண்டு. இவைதவிர மாணவர் சமுதாயம் பரீட்சைகளில் சித்தியடைய வகுப்புக்களை நடாத்தியமையும் கல்வி நிருவாக சேவை தரம் ஐஐஐ இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு அதிபர், ஆசிரியர்களுக்கு பயிற்சிப் பாசறை நடத்தியதிலும் இவ்வமைப்பு பின்னிற்கவில்லை.

அவ்வப்போது வரும் ஆட்சிமாற்ற அரசியலிலும் எங்களது கோரிக்கைக்கு இணங்கியவர்களுக்கு வாக்களித்து வரவேற்பதிலும் வெறுப்பவர்களை வீரத்தோடு விரட்டுவதிலும் வெற்றி கண்ட வரலாறும் அரசியல் சாயமில்லாததால் சாதித்த காரியங்கள் ஏராளம். இனிவரும் காலங்களிலும் இப்படித்தான் இது இயங்கும்.

ஆண்டுக்கொரு பொதுக்கூட்டத்தில் அமர்த்தப்படுவார் 17 அங்கத்தவர்களை உள்ளடக்கிய உயர் சபை உறுப்பினர்கள். தலைவர் தலையசைத்தால் செவிசாய்ப்பார், ஆமோதிப்பார், ஆற்றுப்படுத்துவார் மேலும் தலைமைக்கு கண்ணியமும் உறுப்பினர்களுக்கு உரிமைகளும் கடமைகளும் உணர்வுடனே செயற்படுதல் இதன் உயர்வுக்குச் சான்று.



# அதிசயம்


இவ் உலகில் சில விடயங்கள் இன்னும்
அதிசயமாக்குகின்றது
ஏமாற்றத்தை தருகின்ற போது மனம்
உடையாமல் எழுந்து நிற்பது அதிசயமானது...

பிரிவுகள் ஏற்படும் போது பிசைந்து நிற்காமல்
அடுத்த கட்டத்தை நோக்குவது அதிசயமானது...
அன்பு நிராகரிக்கப்படும் போது அடக்குமுறை
இல்லாமல் அசைந்து செல்வது அதிசயமானது...

துன்பத்தை சந்தித்த போது புன்னகையால்
மீண்டெழ முயற்சிப்பது அதிசயமானது...
எதிரான விடயங்கள் உருவாகின்ற போதுதான்
நேரான வழியில் கட்டியமைக்க
வழிவகுக்கின்றது...

எதற்கும் முற்றுப்புள்ளி மூன்று முறை
வைத்தால் அது தொடர் கதையே...
இதை உணரவைத்த அல்லாஹ்வுக்கு முதற் கண்
அல்ஹம்துலில்லாஹ்

முகம்மட் பரீட் பாத்திமா சஸ்சினா,
கிழக்கு பல்கலைக்கழகம்,
மட்டக்களப்பு, ஏறாவூர்



# அவள் அப்படித் தான்!

சத்தமாய் பேசினால்
சட்டென கண்ணீரையும்..
கவலையை கூறிட்டால்
சரணடைய அரவணைப்பையும்..

உதவிகள் நாடுகையிலே
உள்ளமுவந்த செயல்களையும்..
அதட்டிப் பேசிட்டாலோ
அடங்கிப் போயிடவும்...


தனது உறவுகளின் தேவைகளை
தன் கடமையெனவே எண்ணிடுவாள்..
எத் தவறுதலும் வந்திடாமலே அவள்
கடமைகளில் கண்ணியம் காத்திடுவாள்..

பெற்றோர் வளர்ப்பாலே
பெண்ணியம் காத்திடவும்..
தன் உடன் பிறப்புக்களின்
உணர்வுகளோடு கலந்திடவும்..
தானீன்ற பிள்ளைகளின்
வாழ்வுக்காக முழு அர்ப்பணிப்புகளையும்
செய்திட்ட தியாகியவள்..

இவையெல்லாமே அவளால்
தான் இயலும்
ஆம்..... ஏனென்றால்
பெண்ணவள் அப்படித் தானாம்!..

எம்.என்.பாத்திமா

துணிந்தெழு
வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்
@skytamil.lk
மாதமிருமுறை | இதழ் - 16 | 08 நவம்பர் 2021



# இணையவழிக்கல்வி தற்கால கல்விச் சமூகத்தில் ஏற்படுத்தும் தாக்கம்



தர்மபாலன் கீதாஞ்சலி (BA, MA)
நட்டுவாங்கக்கலைமணி,
ஆசிரியை - பரதநாட்டியம்

தற்காலத்தில் கொரோனா (Covid19) ஊரடங்கினால் உலகம் முழுவதும் உள்ள பாடசாலைகள் பல்கலைக்கழகங்கள் மூடப்பட்ட சூழலில் இணையம் வழியாக கல்வி கற்கவேண்டிய கட்டாயச் சூழல் ஏற்பட்டது. ஆரம்ப காலத்தில் கல்வியை குருகுலம் மூலமும் பின்னர் திண்ணைப் பள்ளிகள் மூலமும் போதித்து வந்தும் சங்க சங்கமருவிய காலங்களில் கல்வியை போதிப்பதில் தமிழ்ச் சங்கங்கள் பெரும் பங்கு வகித்தன.

ஆங்கிலேயரின் ஆதிக்கம் வேரூன்றத் தொடங்கியதும் பள்ளிக்கூடங்கள் கல்வி போதிக்கும் இடங்களாக மாறின. பின்னர் நாளடைவில் கல்வி அனைவருக்கும் பொதுவாகி நாடு முழுவதும் பாடத்திட்டங்களுடன் ஒரு முறையான கல்வி போதிக்கப்பட்டு வருகின்றது. காலத்தின் தேவைக்கேற்ப கல்வித்துறை பல மாற்றங்களை அடைந்தே வளர்ந்து வருகின்றது.

இந்த வகையில் கற்றல் கற்பித்தல் எனும் நேரடி வகுப்பறை நிகழ்வில் ஆசிரியரும் மாணவரும் இணைந்து செயற்படுவது மாறி இணையவழியில் கற்கும் நிலை உருவாக்கப்பட்டுள்ளது. இதனால் தகவல் தொழில் நுட்பத்திறன் விருத்தி காண்பது கண்கூடு. தகவல் தொழில் நுட்பப் பெருவளர்ச்சியில் உலகமே ஒரு சிறிய கைப்பேசிக்குள் அடங்கி விட்டது என்பதும் உண்மை தான்.

இந்த உலகை உலுக்கும் கொடிய நோயினால் மக்கள் வாழ்விலும், பொருளாதாரத்திலும் பல பின்னடைவுகள் ஏற்பட்டுள்ள இச்சூழ்நிலையில் மாணவர்களின் எதிர்காலக் கல்வியில் பெரும் பாதிப்பு ஏற்பட்டு மாணவர்களுக்கு இணையவழிக் கல்விமுறை இன்றைய சூழலில் பெரிதும் தேவையாகிறது. இவ்வாறான இணைய வழிக் கல்வி முறைக்காக மாணவர்களுக்கு அறிதிறன்பேசி (Smart Phone) மடிக்கணனி

(Laptop) கணனி (Computer) போன்ற தொழில் நுட்பக் கருவிகள் மாணவர்களின் கல்விக்காக கட்டாய தேவையாக்கப்பட்டுள்ளது. இந்த தேவைகளை பூர்த்தி செய்து கற்றல் செயற்பாட்டில் ஈடுபட்டு கொள்வதற்கு அனைத்து மாணவர்களுக்கு மட்டுமல்லாது ஆசிரியர்களுக்கும் புதிய சவால்களாகவே உள்ளது. மேலே நான் குறிப்பிட்ட பொருளாதாரப் பிரச்சினை, குடும்ப சூழல் போன்றவற்றினால் பின்தங்கிய மாணவர்களின் நிலை கல்வியிலே கவலைக்கிடமாகவே உள்ளது.



குறிப்பாக அறிதிறன் பேசி எல்லா மாணவர்களிடமும் இருக்காத குடும்ப சூழ்நிலையில் மாணவர்கள் பலர் மன அழுத்தங்களுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றனர். இதனால் இவ்வாறு பாதிக்கப்பட்ட மாணவர்கள் மன அழுத்தங்களுக்கு ஆளாகி கல்வியில் பின்தங்கியவர்களாக உருவாக்கப்பட்டு வருகின்றனர். ஒரு வேளையில் அறிதிறன் பேசி வசதியுடைய மாணவர்களுக்கு இணைய இணைப்பு எல்லா நேரங்களிலும் கிடைக்கப்பெறாத சூழ்நிலையும் காணப்படுகின்றது. இவ்வாறான செயற்பாடுகள் கிராமப்புறத்தில் வசிக்கும் மாணவர்களில் அதிகம் காணக்கூடியது கண்கூடு.

அனைத்து கல்வித் திணைக்களங்கள் பாடசாலை நிர்வாகத்தினூடாக இணையம் வசதி அற்ற மாணவர்களுக்கு எனைய வசதியினையும் தொலைக்கல்வி முறையினையும் கற்றலுக்காக ஏற்பாடு செய்துள்ளது. இருந்தும் இவை இரண்டினூடாகவும் இணையவழியில் கற்கமுடியாத சூழ்நிலையில் மாணவர்கள் தள்ளப்பட்டுள்ளனர். இதற்கான முக்கிய காரணம் குடும்ப பொருளாதாரப் பிரச்சினையினால் மாணவர்கள் தொழிலாளியாகின்றனர். இதனாலும் மாணவர்களும் அவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர்களும் மன உளச்சல்களுக்கும், மன அழுத்தங்களுக்கும் ஆளாகின்றனர்.

மேலும் இணையவழியில் கற்கும் மாணவர்கள் தங்களின் கற்றல் செயற்பாடுகளின் போது தொழில் நுட்பக் கோளாறுகளால் குறித்த நேரத்தில் குறிப்பிட்ட விடயங்களை பெற்றுக்கொள்ள முடியாத சூழ்நிலை ஏற்படுகின்றது. இச்சூழ்நிலை ஆசிரியர்களுக்கும் சிக்கலான சூழ்நிலையாகவே காணப்படுகின்றது. உதாரணமாக வகுப்பறைக் கற்றல் கற்பித்தலின் போது ஆசிரியர்கள் வகுப்பறையில் உள்ள மாணவர்கள் அனைவரையும் நேரடி மதிப்பீடு செய்யக் கூடிய சந்தர்ப்பங்கள் உருவாக்கப்படுகின்றது. ஆனால் இணைய வழிக் கற்றலினூடாக மாணவர்களின் பூரணமான நிலையை அறிய முடியாத சூழ்நிலையில் ஆசிரியர்கள் உள்ளனர். இவற்றை விட பயிற்சி கொப்பிகளையும் மதிப்பீடு செய்வதில் பிரச்சினையாகவே காணப்படுகின்றது.

மாணவர்கள் தங்களின் கற்றல் செயற்பாடுகளின் போது தமது சந்தேகங்களை இணைய வழி கற்றலினூடாக தீர்த்துக் கொள்ள முடியாத சூழ்நிலை ஏற்படுகின்றது. சந்தேங்கள் ஏற்படுகின்ற மாணவர்களினுடைய தீர்வுகளை



முழுமையாக ஒரு ஆசிரியரினால் குறிப்பிட்ட நேரத்தில் தீர்த்துக் கொள்ள முடியாத சூழ்நிலை இணைய வழிக்கற்றலில் ஏற்படுகின்றது. இதனாலும் மாணவர்களுக்கு மன அழுத்தங்கள் ஏற்படுகின்றது. ஆசிரியர்கள் பாராபட்சம் பார்க்கின்றனர் என்ற ஒரு தப்பான எண்ணங்கள் மாணவர்களின் மனதில் ஏற்படுகின்ற வாய்ப்பும் இதனூடாக உருவாக்கப்படுகின்றது.

மேலும் இணைய வழியில் கற்பிக்கப்படும் நீண்ட நேர வகுப்புகளால் கைபேசி, மடிக்கணணி முதலான கருவிகள் வெப்பத்தால் பலவீனமடையும் சூழல் உருவாகின்றது. இதுபோன்று மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் தலைவலி, கண் பாதிப்பு, மனஅழுத்தம் முதலான உடலியற் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளது. Zoom கற்றலினூடாக கற்றல் செயற்பாட்டில் ஈடுபடும் போது இடையிடையே இணையம் இடைநிறுத்தப்படுவதனால் கற்றலில் கவனச் சிதறல் ஏற்படும் நிலையும் உள்ளது.

உலக நாடுகளில் இன்று கல்வி முறையானது இணையவழியினூடாக நடைமுறையில் இருந்தாலும், மேலைத்தேய நாடுகளிலேயே வெற்றிகண்டுள்ளது. எமது நாடான இலங்கையைப் பொறுத்தவரையில் இக்கல்வி முறை பாரிய சவாலாகவே பார்க்கப்படுகின்றது. இதுவரை காலமும் இலங்கை மாணவர்கள் இக்கல்வி முறை தொடர்பான அறிவையோ, தேவைப்பாட்டையோ கொண்டிருக்கவில்லை.

ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் இணையக்கல்வி தேவைப்பாடு கட்டாயமாக தேவைப்படாத ஒன்றாகவே இருந்தது. திடீரென அறிமுகம் செய்யப்பட்ட இக்கல்வி முறையால் அதனை எவ்வாறு பெற்றுக்கொள்வது, கலந்து கொள்வது தொழில் நுட்பசாதனங்களை எவ்வாறு பயன்படுத்துவது என்பது தொடர்பில் இன்றுவரை மாணவர்கள் மத்தியில் சிக்கல்களும் சவால்களுமாகவே இருந்து வருகின்றது. மாகாணங்கள், மாவட்டங்கள் என்ற ரீதியில் இணைய வழிக்கல்வியானது மன அழுத்தங்களுடன் கூடிய சவால்களாகவே உள்ளது. குறிப்பாக ஊவா மாகாணத்தினை எடுத்துக் கொண்டால் மாணவர்கள் இணையமூடாக கல்வியினைப் பெறுவதற்கு கொடிய விலங்குகள் நடமாடும் ஆபத்தான இடங்களிலேயே தமது கற்றலினை மேற்கொள்ளுகின்றனர்.

இதே சூழ்நிலையிலேயே ஆசிரியர்களும் தள்ளப்படுகின்றனர். ஏன் கிழக்கு மாகாணத்தினை எடுத்துக் கொண்டால் 30 சதவீதமான மாணவர்கள் மட்டுமே "ஒன்லைன்" வகுப்புக்களில் கலந்து கொள்கின்றமையும் பின்தங்கிய கஷ்ட அதிஷ்ட பிரதேச பாடசாலைகளிலிருந்து பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாகின்ற மாணவர்களுக்கு இணையவழிக் கல்விமுறையால் கல்வி நிலையானது இன்று கேள்விக் குறியாகியுள்ளதும் குறிப்பிடத்தக்க விடயங்களாகும்.

தொடரும்....



# மாணவர்களின் கற்றல் திறன்கள் மேம்பாட்டில் தங்கியுள்ள ஆசிரியரின் வகிபாகம்

**Mrs. Ziara**
B.Ed [Aims University]

ஆசிரியரானவர் விரிவுரையாளராக இன்றி கற்றலுக்குத் துணைபுரிபவராக செயற்பட வேண்டும். மாணவர்கள் அனைவரும் தனியாள் வேறுபாடுகளைக் கொண்டிருப்பார்கள். அவர்களின் திறன்கள், ஆற்றல்கள் என்பன வேறுபட்டவை. அவர்களின் விருப்பு, வெறுப்புகளை அறிந்து அதற்கேற்றவாறு கற்பித்தல் செயற்பாடுகளை ஒழுங்கமைத்து துணைபுரிய வேண்டும். எல்லா மாணவர்களுக்கும் விரிவுரை முறை பொருந்தாது.

மாணவர்கள் பல்வேறுபட்ட ஆற்றல்களை, திறன்களை கொண்டிருப்பார்கள். அவர்களின் திறன்களை அறிந்து ஊக்கப்படுத்துபவராக இருக்க வேண்டும்.

உதாரணமாக: மாணவன் பேச்சாற்றலைக் கொண்டிருப்பான். மாணவர் ஆக்கச் செயற்பாடுகளில் வினைத்திறனாக இருப்பார்கள். சிலர் விளையாட்டில் ஆர்வம் காட்டுவர். சிலர் கலைகளில் விருப்பமுடையவர்களாக இருப்பார்கள். ஆசிரியர் என்பவர் மாற்றுத் தாயாக செயற்பட வேண்டும். மாணவர்கள் வீட்டிலிருந்து பதின்மூன்று வருடங்களை பாடசாலையில் கழிக்கின்றார்கள். ஒரு நாளில் 8 மணித்தியாலங்களை பாடசாலைகளிலேயே ஆசிரியருடன் கழிக்கின்றனர். எனவே அவர்களின் நாளின் ஒரு பாதி பாடசாலையில் செலவழிக்கின்றனர். எனவே வீட்டிற்கு அடுத்தபடியாக பாடசாலையின் வகுப்பறையாகும்.

இங்கு ஆசிரியரியரானவர் பிள்ளைகளிடம் அன்பு, அரவணைப்பு, பாதுகாப்பை வழங்குபவராக இருக்க வேண்டும். வீட்டில் பிள்ளைகளின் உணர்வு, தேவைகளை அறிந்து செயற்படுவது போன்று ஆசிரியரும்

பிள்ளைகளின் உணர்வுகள், தேவைகளை, வளர்ச்சி விருத்திக் கட்டங்களை அறிந்து செயற்பட வேண்டும். ஆசிரியரானவர் கற்றல் திறன்களைக் கொண்டவராக இருக்க வேண்டும். அவ்வாறு கற்றல் திறன்களை கொண்டிருந்தாலேயே மாணவர்களை திறன்களை நோக்கி வழிகாட்டலாம்.

உதாரணமாக: ஆசிரியர் சிறந்த தொடர்பாடல் திறனைக் கொண்டிருப்பவராயின் மாணவர்களின் பேச்சு, கேட்டல், எழுத்து, வாசிப்பு என்பவற்றை மேம்படுத்த பயிற்சிகளை வழங்குவார். சிறந்த தொடர்பாடலை மாணவர்களுடன் மேற்கொள்வார்.

சிறந்த பாடப்புலமை கொண்டவராக இருக்க வேண்டும். தன்னுடைய பாடத்திலும் மற்றைய பாடங்களிலும் அறிவினைக் கொண்டிருக்க வேண்டும். புத்தக அறிவிற்கு மேலாக ஆழ்ந்த பாட அறிவைக் கொண்டிருக்க வேண்டும். புதிய விடயங்களை தேடிக் கற்பவராகவும், கற்றலில் வாழ்நாள் மாணவனாக இருக்க வேண்டும். காலத்திற்கேற்றவாறு தன்னை மாற்றிக் கொள்பவராக இருக்க வேண்டும்.

உதாரணமாக: 21ஆம் நூற்றாண்டின் கல்வியில் தகவல் அறிதல், தொழில்நுட்ப சாதனங்களின் பயன்பாடு காணப்படுகிறது. ஆசிரியர் அச்சாதனங்களை கற்று மாணவர்களுக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டும். கணனியை இயக்கத் தெரிந்திருத்தல்.

மாணவர்களின் பிரச்சினைகளை அறிந்து அதனை இயலுமான வரை தீர்க்கும் ஆற்றல் காணப்பட வேண்டும். மாணவர்கள் பல்வேறுபட்ட சூழல்களிலிருந்து வருபவர்கள் எல்லா மாணவர்களின் வீட்டு சூழலில் ஒரே மாதிரியாக காணப்படமாட்டாது. அவர்கள் வகுப்பறையினுள் வந்தவுடன் அவர்களின் மனநிலையை மாற்றும் ஆதரவுடன் செயற்பட வேண்டும். சில மாணவர்கள் கற்றல்




இடர்பாடுகளை கொண்டிருப்பர். உளவியல் பிரச்சினைகள், சமூகமாதல் தொடர்பான பிரச்சினைகளைக் கொண்டிருப்பர். அவர்களின் பிரச்சினைகளை இனங்கண்டு அதற்கு சரியான தீர்வினை பெற்றோரின் உதவியுடன் மேற்கொள்ள வேண்டும்.

உதாரணமாக: ADHD, Autism, மீடிறன் கூடிய மாணவர்கள்.

ஆசிரியரின் வினைத்திறன் மிக்கவராக செயற்பட வேண்டும். தன் பாடப் பரப்பிலும், வகுப்பறை முகாமைத்துவத்திலும் சிறப்பாக செயற்பட வேண்டும். பாடசாலையில் கிடைக்கும் வளங்களை சிறப்பாக பயனுறும் விதத்தில் மாணவர்களுக்கு வழங்கக் கூடியவராக இருக்க வேண்டும்.


ஆசிரியரானவர் உயர் தொழிற்தகைமையை கொண்டிருக்க வேண்டும். கற்பித்தலில் புத்தாக்க சிந்தனை மூலம் புதிய கற்பித்தல் நுட்பங்களை கையாளுபவராக இருக்க வேண்டும். புதிய மதிப்பீட்டு முறைகளை பயன்படுத்துதல். பல்வேறுபட்ட கலப்பு கற்பித்தல் முறைகளையும் வகுப்பறையில் பயன்படுத்தக் கூடியவராக இருக்க வேண்டும். மாணவர்களின் சுய கற்றல், திறமைகளை வெளிக் கொண்டுவர வேண்டும்.

**உதாரணமாக: கலந்துரையாடல்**
**பயிற்சி செய்தல்**
**தொடர்பாடல்**
**தொழில்நுட்ப பயன்பாடு**
**விரிவுரை**

ஆசிரியரானவர் மாணவர்களுக்கு ஒரு முன்மாதிரியாக செயற்பட வேண்டும். சிறந்த ஒழுக்க விழுமியப் பண்புகளைக் கொண்டிருக்க வேண்டும். மாணவர்கள் அவதானித்து நடத்தைகளைக் கற்றுக் கொள்வார்கள். ஆசிரியரின் நடத்தையை அவதானித்து தானும் கற்றுக் கொள்வார்கள். எனவே ஆசிரியர் சிறந்த நடத்தையை வெளிப்படுத்த வேண்டும்.

மாணவர்களை ஊக்கப்படுத்துபவராகவும், உற்சாகப்படுத்தக் கூடியவராகவும் இருக்க வேண்டும். மாணவர்களுக்கு பெருமதிகளையும், பாரட்டுகளையும் வழங்கும் போது அவர்கள் ஊக்கப்படுத்தப்படுகிறார்கள். ஒரு செயற்பாட்டை மாணவன் செய்து முடிக்கும் போது அவனைப் பாராட்ட வேண்டும். இதனால் அம்மாணவன் மேலும் கற்றலை மேற்கொள்ள ஆர்வமூட்டப்படுகிறான். இதனை விட சிறப்பாக செய்ய வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கும். அவர்கள் பிழைகள், தயக்கங்களைப் காட்டும் போது நம்பிக்கையளிக்க வேண்டும். இதனால் மாணவர்களில் தன்நம்பிக்கை ஏற்படும். ஆளுமை விருத்தியும் ஏற்படும்.

சிறந்த தலைமைத்துவ பண்பைக் கொண்டிருக்க வேண்டும். மாணவர்களை சிறப்பான கற்றல் அடைவை நோக்கி வழிகாட்டுபவராக செயற்பட வேண்டும். தலைமை எனும் போது சிறந்த ஆளுமையைக் கொண்டிருக்க வேண்டும். பிரச்சினைகளைக் கண்டு ஒதுங்காமல் சாத்தியமான மாற்று வழிகளைத் தேடுவதும், அவற்றுள் மிகவும் சிறந்த ஒன்றைத் தெரிவு செய்யவும் நடைமுறைப்படுத்தும் ஆற்றலைக் கொண்டிருக்க வேண்டும்.




அதே போன்று திட்டமிடல், நேரமுகாமைத்துவம், சுய முகாமைத்துவம் போன்ற பண்புகளையும் கொண்டிருக்க வேண்டும். ஆசிரியருக்கு நேர முகாமைத்துவம் என்பது அத்தியாவசியமானதாகும். சரியான நேர முகாமையின் மூலமே கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை, பாடப்பரப்புகள் குறிப்பிட்ட கால வேளையினுள் செய்து முடிக்கலாம். சுய முகாமைத்துவமானது சிறந்த ஆளமையுள்ளவராக செயற்பட துணைபுரிகின்றது.

ஆசிரியர் தன்னைத் தானே எவ்வாறு வழிப்படுத்திக் கொள்கிறார் என்பது விஷேடமான தேர்ச்சியாகவும், திறனாகவும் வெளிப்படுகின்றது. பாடசாலைகளின் தொழிப்பாடுகளையும், குறிக்கோள்களையும் நிறைவேற்ற தம் திறமைகளைப் பயன்படுத்த வேண்டும். மாணவர்களுக்கு சமூகமயமாதலை விருத்தி செய்யக் கூடியவராக செயற்பாடுகளை

ஒழுங்கமைத்துக் கொடுப்பவராக இருக்க வேண்டும். மாணவர்கள் இணைந்து செயற்படல், உதவி செய்தல், ஒற்றுமை போன்ற சமூக திறன்களை விருத்தி செய்தல்.

மேலும் ஆசிரியரானவர் நேர்மையானவராக செயற்பட வேண்டும். எல்லா மாணவர்கள் பாரபட்சம் இன்றி சமமாக பார்க்கும் தன்மை காணப்பட வேண்டும். மாணவர்களிடையே தீர்வுகளைக் காணும் போது பக்கச் சார்பற்ற முறையில் தீர்வினை வழங்குபவராக செயற்பட வேண்டும். மேலும் ஆசிரியரிடம் சிறந்த குரல் வளம், தொனி வேறுபாடு, மொழி விருத்தி, தெளிவான எழுத்து, விளக்கமான பேச்சு என்பன காணப்பட வேண்டும்.

மேலும் பெற்றோர், சமூக தொடர்புகளை பேணக்கூடியவராக இருக்க வேண்டும். மாணவர்களின் கற்றல் அடைவுகளை, இடர்பாடுகளை பெற்றோருடன் கலந்துரையாட வேண்டும். இதன் போது பெற்றோரும் தம் பிள்ளையின் கல்வியில் அக்கறை காட்டுவர். பிள்ளைகளின் விருத்தியில் பங்களிப்பை வெளிப்படுத்துவார்கள். மேலும் ஆசிரியர்கள் சமூகத்துடன் தொடர்புகளைப் பேண வேண்டும். கலாசார நிகழ்வுகள் உபகரணத் தேவைகளின் போது தேவையானவர்களிடம் இருந்து உதவியைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

மாணவர்களில் அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றை பூரணமாக விருத்தி செய்வதற்காக ஆசிரியர் துணைபுரிய வேண்டும். மாணவர்களுக்கு சமூகம் பற்றிய தெளிவான கண்ணோட்டத்தை உருவாக்க வேண்டும். மாணவர்களுள் நாட்டின் கலாசாரம், தேசப்பற்று என்பவற்றை வளர்பவராக செயற்பட வேண்டும். அமைதி, நல்லிணக்கம் என்பவற்றை விருத்தி செய்வதில் தனியாகவும், நிறுவன ரீதியாகவும் பங்காற்ற வேண்டும். மாணவர்களின் எதிர்கால வாழ்வுக்கும், தொலிலுக்கும் வழிகாட்டியாக உதவுபவரே சிறந்த ஆசிரியருக்கான அடையாளமாகும்.








# கத்தாரில் ஓவியக் கலையில் கலக்கும் இலங்கை இளைஞன்

## நஸார் சர்பான்



தொகுப்பு:
ஜே.எம்.பாஸித்



தனது ஓவியத் திறமை மூலம் இன்று கட்டார் நாட்டில் ஓர் அடையாளம் காணக்கூடிய ஓவியராகத் திகழும் நஸார் சர்பான் இலங்கையின் கிழக்கின் அம்பாரை மாவட்டத்தில் இயற்கையால் சூழப்பட்ட இறக்காமத்தை சேர்ந்தவர்.

இவரது ஓவியத் திறமையானது சிறு வயது காலம் முதல் இவர் கூடவே பயணித்தது. இயற்கையின் அழகும், சுவரோவியங்கலும், வரலாற்று கலைகள் போன்றவற்றை பள்ளி காலங்களில் இருந்தே வரைய ஆரம்பித்தார். இவரது திறமையை இனம்கண்ட பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் நணபர்கள் இவரின் இத் திறமை மூலம் ஒரு வெற்றிப் பாதையை நோக்கிச் செல்ல ஊக்கமளித்தனர். ஆரம்பத்தில் பாடசாலைக் காலங்களின் முடிவில் தேசிய மட்டம் வரையிலான ஓவியப் போட்டிகளில் கலந்து கொண்டு முதலிடமும் பெற்ற இவர் தனது 23 ஆவது வயதில் இலங்கையின் உத்தியோகபூர்வமான கலைஞர்களுக்கான அடையாளத்தை பெற்றார்.



இருந்தாலும் இவரது குடும்ப பின்னணியும் நடுத்தர வாழ்க்கையும் இவர் பொருளாதாரத்தை பற்றி சிந்திக்க



வைத்தது. அதனால் பொறியியல் மற்றும் வடிவமைப்பு துறைகளை தெரிவு செய்து கட்டாரை நோக்கி பயணத்தை ஆரம்பித்தார். கட்டாரில் பல போராட்டங்கள் மற்றும் முயற்சிகளின் பின்பு South West Architect எனும் கட்டட வடிவமைப்பு நிறுவனத்தில் Junior landscape designer Mf 2 வருடங்கள் பணிபுரிந்து தற்போது Senior Landscape Designer ஆக கடமை புரிந்து வருகிறார்.

ஆனாலும் இவர் ஓவியங்கள் வரைவதை நிறுத்தாமல் தொடர்ந்தும் ஓய்வு நேரங்களில் ஓவியங்கள் வரைந்து வருகின்றார். அதன் விளைவாக கட்டாரில் உள்ள ஓவியர்கள் மற்றும் அவர்களின் குழுமத்தின் ஊடாக கட்டார் போன்ற வளர்ச்சி அடைந்த நாடுகள் கலைகளுக்கும் பாரம்பரியத்துக்கும் கொடுக்கும் முக்கியத்துவம் இவரை கவர அவை தொடர்பான ஓவியங்களை வரைந்து தனது திறமையை கட்டார் நாட்டில் வெளிக்காட்டி வருகிறார். தொடர்ந்தும் தனது ஓய்வு நேரங்களை அதிகமாக ஓவியங்கள் வரையும் நேரங்களாகவும் அது சம்மந்தமான நுணுக்கங்களை ஆராய்வதுமாக அமைத்து கொண்டார். இதன் விளைவாக முதன்முறையாக ஒயில் வர்ணங்களில் ஓவியங்கள் வரைவதை பழக்கமாக்கி கொண்டார். இதனால் முதலில் வரையபட்ட ஊயஅநட ழக ஞயவயச

கட்டார் ஓவியர்கள் குழுமத்தில் ஒரு சிறந்த வரவேற்பை இவருக்கு பெற்றுத் தந்தது. தொடர்ந்தும் இவரால் வரையப்பட்ட ஓவியங்களான Horse in Sunrise மற்றும் Peregrine Falcon என்பன கட்டார் யுசவ ளுிழவ இனால் கத்தாராவில் மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டது. இது இவரது முயற்சி மற்றும் திறமைக்கு கிடைத்த மிகப்பெரிய அங்கீகாரமாகும். தொழில் வாய்ப்பிற்காக பிற நாட்டிற்குச் சென்றாலும் தனது ஓய்வு நேரங்களை தனது திறமையை வெளிப்படுத்தும் களமாக அமைத்த இவர் நிச்சயம் பாராட்டுக்களுக்குரியவரே.

தொடர்ந்தும் திறமையை மேம்படுத்திக் கொண்டவராக இறைவனின் துணையுடன் நகர்கிற இவரது கலைப் பயணத்தில் இன்னும் பல சிறந்த ஓவியங்களை வரைந்து சாதனை பெற துணிந்தெழு சஞ்சிகை சார்பாக வாழ்த்துக்கள்.






# உலக சாதனை படைத்த நான்கு வயது சிறுமி அனத் ஜிதாஹ்..!



றொஸான் முஹம்மட்

அம்பாறை மாவட்டம் நிந்தவூர் முதலாம் பிரிவைச் சேர்ந்த பாத்திமா அனத் ஜிதாஹ் உலக சாதனை படைத்து சர்வதேச சாதனை புத்தகத்தில் (International Book of Records) தனது பெயரை பதிவு செய்து தனது பொற்றோர்களுக்கும், நாட்டுக்கும், ஊருக்கும் பெருமை சேர்த்துள்ளார் .

ஆசிய நாடுகளின் கொடிகளை மிக வேகமாக அடையாளம் காணக்கூடியவர் (Fastest to Identify Flags of all Asian Countries) எனும் முதலாவது உலக சிறுமி எனும் அந்தஸ்தை தனதாக்கிகொண்டார்.

டிசம்பர் 3, 2016 இல் பிறந்த இவர், தனது 4 வயது 8 மாதங்களில் இவ் சாதனையை படைத்துள்ளார். அனைத்து 48 ஆசிய நாடுகளின் கொடிகளையும் வெறும் 24 வினாடிகளில் வேகமாக அடையாளம் கண்டு ஆசியா சாதனை புத்தகத்தில் ஏற்கனவே தன் பெயரை பதிவு செய்த இச் சிறுமி அண்மையில் உலக சாதனைக்கு விண்ணப்பித்ததுடன் இவரது திறமையை பரிசீலனை செய்து உலக சாதனை சிறுமியாக தமது இணையத்தளத்தில் வெளியிட்டதுடன் ஒரு சில வாரங்களுக்குள் இவருக்கான பரிசில்கள், பதக்கங்கள் வழங்கி கௌரவிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. உலக சாதனைக்கான இவ் சாதனையை 23 வினாடிகளில் நிகழ்த்தியுள்ளார்.

சிறு வயதிலேயே சிறந்த ஞாபக சக்தியும் பல திறமைகளையும் தன்னகத்தே கொண்டுள்ள இவர் MLM. ஜெஸீம், U.K.பாத்திமா ஜவ்ஹறா தம்பதிகளின் செல்வ புதல்வி என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேலும் நான்கு வயது நிரம்பிய இச்சிறுமி எட்டு வயதுக்கு மேற்பட்டோருக்கு காணப்படும் கல்வி மற்றும் ஏனைய அறிவுகள் இவருக்கு காணப்படுவதாகவும், ஆசிய சாதனை புத்தகம் உலக சாதனை புத்தகம் என்பவற்றில் தனது பெயரை இச் சிறிய வயதில் பதிவு செய்த இச்சிறுமி இன்னும் பல சாதனைகளுக்கு முயற்சி செய்து கொண்டிருப்பதாகவும் இவரது பெற்றோர்கள் குறிப்பிடுகின்றனர்.

# இலங்கையில் வாழக்கூடிய ஒவ்வொருவரும் நாம் இலங்கையர்கள் என்ற மனநிலையோடு செயற்பட வேண்டும்.



## தேசிய இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்

# அஹ்மத் சாதிக்



2020 இல் பிரதேசவாரியாக நடாத்தப்பட்ட ஐந்தாவது தேசிய இளைஞர் பாராளுமன்ற தேர்தலில் இலங்கையில் அதிகூடிய வாக்குகளை பெற்றார் பேருவளை அஹ்மத் சாதிக். இவர் வெளிவிவகாரங்கள் மற்றும் இராஜதந்திர உறவுகளின் பிரதி அமைச்சராக இளைஞர் பாராளுமன்றத்தில் நியமிக்கப்பட்டார்.

ஐந்தாவது தேசிய இளைஞர் பாராளுமன்றத்தினுடைய முதலாவது அமர்வில் இவரது கன்னி உரையில் பிரதான கருப்பொருளாக "தேசிய இளைஞர் கொள்கை" என்ற தலைப்பில் உரையாற்றினார்.

இக்கருப்பொருளின் அடிப்படையில் "சமாதானமும் நல்லிணக்கமும் அத்தோடு வெளிவிவகாரம் மற்றும் ராஜாதந்திர உறவுகள்" ஆகிய விடயங்கள் உள்வாங்கப்பட்டிருந்தமையும் முக்கிய அம்சமாகும்.

மேலும் அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர் இலங்கையில் தேசிய ரீதியில் சிறந்த நல்லிணக்கத்தையும் சமூக ஒற்றுமையையும் வளர்த்துக்கொள்ள அரசினால் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பல் கலாச்சாரத்தை அடிப்படையாகக் கொண்ட இந்நாட்டில் வாழக்கூடிய ஒவ்வொரு நபரும், இளைஞர்களும் நாம் இலங்கையர்கள் என்ற மனநிலையோடு செயற்பட வேண்டும் என்பதே இதன் பிரதான நோக்கமாகும் என்றார்.

மேலும் வெளிவிவகாரம் மற்றும் இராஜதந்திர உறவுகள் அமைச்சின் கீழ் இளைஞர் பாராளுமன்றம் மற்றும் பல்கலைக்கழகங்களை அடிப்படையாக வைத்து இளைஞர்களை ஒன்று சேர்க்கக்கூடிய வகையிலான மாதிரி ஐக்கிய நாடுகள் சபைகளின் (Model United Nations) செயற்பாடுகளானது பிற நாடுகளில் உள்ளதை போன்று எதிர்காலத்தில் இலங்கையிலும் ஊக்குவிக்கப்பட்டு உருவாக்கப்படல் வேண்டும் என இளைஞர் பாராளுமன்ற வெளிவிவகாரங்கள் மற்றும் இராஜதந்திர உறவுகளின் பிரதி அமைச்சர் அஹ்மத் சாதிக் தெரிவித்தார்.

அந்தவகையில் 2020 ம் ஆண்டு நடைபெற்று முடிந்த இத் தேசிய இளைஞர் பாராளுமன்றத்தில் 360 உறுப்பினர்களில் முஸ்லிம் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 40 இளைஞர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மழையோடு நடந்த சாரல்

பாத்திமா ஆஸிபா
புத்தளம்

அன்றொரு நாள் அந்தி சாயும் வேளை
சில்லென்ற தென்றலுடன்
சாரலாய் மழை...
நிஜத்தில் மட்டுமா மழை?
அவள் மனதிலும் தான்
அதன் பிரதிபலிப்பு...

இருபுறமும் புடை சூழ பாரிய மரங்கள்
வெறிச்சோடிய சாலை அழகிய வேளை
அவள் மட்டும் தன்னந் தனியே
நடக்கின்றாள் விடியலைத் தேடி...

இருள் சூழ்ந்த நிசப்தம் நிஜத்திலும்
அவள் மனதிலும்...
இதைத்தான் எதிர்பார்த்தாள்
யாருமற்ற தனிமையை...
சற்றும் எதிர்ப்பாரா வண்ணம்

இதோ!! கிடைத்து விட்டது அத்தருணம்...
அழகிய தருணமாய்...
அவளின் சிதறிய கனாக்களை
அவள் மனதில் சிதறச் செய்ய...

நிமிடங்கள் கரைந்தோட
நிஜங்கள் புரட்டிப் போட
தன்னந்தனியே நடக்கின்றாள் அவள்...
கால் சென்ற வழியினில் வலியுடன்..
அவளின் கனவுகளை சுமந்தப்படி...
மழையோடு நடந்த சாரலாய்
இது அவள் வாழ்வில்...





# வாழ்க்கையில் நீ தோற்று விட்டாயா...?



சிம்லான்
வெலிகாமம்

"ஐயோ...! நான் தவறு செய்து விட்டேனே ! எனது வாழ்க்கையில் எனக்குக் கிடைத்த வாய்ப்பை தவற விட்டேனே" என்று கவலைப்படுகின்றாயா?
வருத்தப்படுகின்றாயா?
அப்படி என்றால் நீ முதலில் கவலைப்படுவதை நிறுத்திவிடு. ஏன் என்றால் இந்த உலகத்தில் மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் தனக்குக் கிடைக்கும் பல அனுபவங்களினூடாகத் தான் பல விடயங்களை கற்றுக் கொள்கிறார்கள்.

மற்றவர்கள் கூறும் கேலி, கிண்டல் போன்ற தேவையற்ற விடயங்களை உன் மனதில் தேக்கி வைத்து உன்னையே நீ கஷ்டப்படுத்திக் கொள்ளாதே.

ஏன் என்றால் அவர்களும் ஒரு காலத்தில் பலரது விமர்சனங்களுக்கும், கேலிகளுக்கும், கிண்டல்களுக்கும் ஆளானவர்கள்தான். தோல்வி அடைந்த பின்புதான் அதன் அனுபவம் என்ன என்று புரியும்.

எனவே மற்றவர்கள் கூறும் விமர்சனங்களைக் கண்டு நீ ஒதுங்கிப் போய் விடாதே. தோல்வி என்பது வெறும் மூன்று எழுத்து மட்டுமல்ல அதனுள் பல விடயங்கள் உள்ளன.

நாம் அதை புரிந்துகொள்ளாமையின் காரணமாகத்தான் நாம் எங்களுடைய வாழ்வில் ஏற்படுகின்ற தோல்வியினால் மன உளைச்சலுக்கு ஆளாகின்றோம். இதன் காரணமாக மறுபடியும் முயற்சி செய்யாமல் விட்டுவிடுகிறோம்.

சில பெரியோர்கள் கூறுவார்கள் 'தோல்விதான் வெற்றிக்கான முதல் படி' என்று. ஆம் உண்மையிலேயே தோல்வி தான் நமது வெற்றிக்கான முதல் படியாக அமைகிறது.

ஏனெனில் நாம் ஒரு விடயத்தை செய்து அதில் தோல்வி கண்டால் அத் தோல்வி தான் நமக்கு இன்னொரு வாய்ப்பை ஏற்படுத்தித் தருகிறது. உன்னால் முடியும், நீ மறுபடியும் முயற்சி செய், நிச்சயமாக வெற்றி காண்பாய் என்று அத் தோல்வி தான் உனக்கு இன்னொரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி தருகிறது.

வெற்றி என்பது உனக்கு சந்தோஷத்தை தரும். ஆனால் தோல்வி மட்டுமே உன்னை இன்னும் அதிகமாக ஊக்கப்படுத்தும், தோல்வி மட்டுமே உனக்கு தன்னம்பிக்கையை தரும், தோல்வியால் மட்டுமே உனக்கு நல்ல அனுபவத்தினைத் தர முடியும்.

எனவே நீ ஒரு விடயத்தை அடைவதற்கு முயற்சி செய்து அதில் தோல்வி கண்டால் சோகமாக இருக்காதே, தோற்று விட்டேனே என்று புலாம்பாதே. அதற்கு பதிலாக நான் ஏன் தோற்றேன் என்ற கேள்விக்கான பதிலைத் தேடு. வெற்றியை நோக்கி உன் காலடியை எடுத்துவை.

இது உன்னுடைய வாழ்க்கை. நீ நம்பினால், நீ கஷ்டப்பட்டால், நீ போராடினால் மட்டுமே உன்னால் இவ் உலகை வெல்ல முடியும்.

எனவே நாம் வெற்றியை மட்டும் நேசிக்காமல் தோல்வியையும் நேசிக்க பழகுவோம். எமது ஒவ்வொரு தோல்விற்குப் பின்னாடியும் ஒரு வெற்றி கண்டிப்பாக இருக்கும் என்பதை உணர்ந்து செயற்படுவோம்.... வெற்றி உனக்கே.....

**'உன்னை நீ நம்பினால் உலகையே வெல்லலாம்'**



# சுயகவி

எழுத்தாளும் உலகில்
நானும் ஒருத்தியாய்
எழுத்துலகில் தடம்பதிக்கவே
மனங்குதிக்கையில்–
கவி வரிகளால் கவிமழை

பொழிய
மனம் ஊஞ்சலாட
துணிந்து வா!!!
துணிந்தெழு நான் இருக்கிறேன்–உன்
திறமை உலகறியச் செய்யவென

எனை ஆரத்தழுவ–
துணிந்தெழு அகமனம் கண்டு–
மனந்திறந்து
வரைகிறேன் நான்...
முதற்தடமாய் இச்சுயகவியை...



Y.F.Rijwana
SEUSL - kurunegala



# கடந்த காலத்தை நினைத்து நிகழ் காலத்தைத் தொலைத்தல்..



ஷப்ரா இல்முத்தீன்
அட்டாளைச்சேனை

கடந்த காலம் என்பது நம் வாழ்க்கையில் இன்றியமையாத மிக முக்கியமான ஒரு காலப்பகுதியாகும். எத்தனையோ வகையான வெற்றிகளை, தோல்விகளை, பிரச்சினைகளை, தீர்வுகளை, ஏற்றங்களை, இறக்கங்களை, மனோ உளைச்சல்களை, விட்டுக்கொடுப்புகளை மனிதர்களை என்று ஒவ்வொன்றைப் பற்றியும் தனித்தனியாக நாம் விரும்பியோ விரும்பாமலோ உணர்ந்து கொண்ட அந்த காலத்தினை ஒரு படிப்பினையாக நம் வாழ்வில் எடுத்துக்கொள்ளுதல் பிரதானமான ஒரு விடயம் தான்.

அதற்காக கடந்த காலத்தில் நம்மை அதிகமாகவே மன உளைச்சலுக்கு உள்ளாக்கி நம்மை அழ வைத்த, நம்மை சிரமப் படுத்திய விடயங்களை மாத்திரம் நாம் அடிக்கடி மனதில் அசைபோட்டுக் கொண்டு அதனை விட்டும் வெளிவராதிருத்தல் என்பது அத்தனை பொருத்தமான ஒரு விடயமாக ஒரு போதும் அமைந்து விடாது. எம் வாழ்க்கைக்கான தீர்வாகாவும் அது என்றைக்குமே இருந்து விடவும் மாட்டாது.

நம்மை மகிழ்ச்சிப் படுத்திய விடயங்களை நாம் உடனே மறந்து நம்மைத் துக்கப்படுத்திய விடயங்களை அடிக்கடி நம் மூளைக்குள் ஓடச் செய்வது அதிகமாக மனிதர்களைப் பீடித்திருக்கும் ஒரு மனோ நிலையாகும். இதனால் நமக்குள்ளே எந்த நன்மைகளும் ஏற்பட்டு விடப் போவதில்லை. மாறாக நம்மை இப்படியெல்லாம் ஆக்கி விட்டார்களே, நாம் இவ்வாறெல்லாம் ஏமாந்து போய் விட்டோமே, நம் முயற்சிகள் எதுவும் கை கூடவில்லையே, நம்மை யாருமே பாராட்டுகிறார்கள் இல்லையே, நம்மை எல்லோரும் ஒதுக்கி வைக்கிறார்களே இவ்வாறான சிந்தனைகள் அடிக்கடி நம்மை ஆட்டிப்படைக்கையில் மகிழ்ச்சியாய் நகர்த்தப்பட வேண்டிய நம் நொடிகளையும் நாமே சிரமத்துக்குள்ளாகி கைசேதப்பட்டு போகும் நிலை ஒருபோதும் நமக்கு வந்து விடவே கூடாது.

இன்றைய பெரிய பெரிய சாதனையாளர்களெல்லாம் கடந்த காலத்துக்குள் கரைந்து மூழ்கி மண்ணோடு மறைந்து போனவர்களாக இருக்கவில்லை. மாறாக கடந்த காலத்தை மிகப்பெரிய ஆசானாக எடுத்துக்கொண்டு வாழ்க்கையின் யதார்த்தத்தை கற்றுக் கொண்டவர்கள் அவர்கள்.

அதே போன்று நாமும் கடந்த காலத்தைக் கொண்டு அதில் இழந்தவற்றை விட சிறப்பானதை இறைவன் நமக்குத் தருவான் என்ற நம்பிக்கையில் எம் பாதங்களை முன்னோக்கி எடுத்து வைக்கும்போது வினோதமான ஒரு உலகம் நம்மை வரவேற்பதாய் நாம் உணர்வோம். பணம் செலுத்தா ஆசானாக நமக்கு கடந்தகாலம் ஆகிவிடும்.

இதெல்லாம் நிறைவேறி ஒரு காலத்தில் நாம் இழந்தவைகளை விட சிறப்பானதொன்றை அடையும் போது கடந்து வந்த பாதையை நோக்கி புன்னகையொன்று பூக்கத் தோன்றுமே..

அதுதான் நம் ஆத்மீக வெற்றியாக இருக்கும் என்றைக்குமே..



# சமூகத்தை அடிமையாக்கும் சமூக வலைதளங்கள்..!!



**ஷிமா ஹரீஸ்**
பேராதனைப் பல்கலைக்கழகம்

சமூக வலைத்தளங்களின் இன்றைய வளர்ச்சியானது பல்லாயிரம் கி.மீ தொலைவிலுள்ள தொழிலாளியையும் நிர்வகிக்கும் இணைப்புப் பாலமாய் பயணிக்கின்றது என்பது மறுக்க முடியா உண்மையே. உலகில் வாழும் ஒவ்வொருவரும் ஒருவரை ஒருவர் அறியாமல் வாழலாம். ஆனால் சமூக வலைத்தளங்களை பயன்படுத்தாது எந்த மனித ஜீவனும் வாழுமா எனும் சந்தேகம் ஆய்வுகளில் எழுந்துள்ள அளவு இவ் வலைதளம் விருத்தி அடைந்துள்ளது.

சமூக வலைதளம் எனப் பெயர் கொண்ட அரக்கன் உலகில் உதித்ததே இணையம் என்ற பெயருடன் 1990ம் ஆண்டு காலத்தில் தான். ஆனால் அதன் அசுர வேகமோ ஆரம்பத்தில் “பேஸ்புக்“ ஆகவும் பின்னர் டுவிட்டராகவும் பிற்பட்ட காலங்களில் வாட்ஸ்அப், ஸ்கைப், கூகுல், மெசென்ஞர் என பல பெயர் கொண்டு உருமாறி பல்வேறு தொழிநுட்ப விருத்திகளுடன் இன்று உயிர்களை காவு கொள்ளும் ஓர் உயிர் கொல்லியாக மாற்றம் பெற்று விட்டது என்பது கவலைக்கிடமாகும். இது ஆரம்பத்தில் பொழுதுபோக்கிற்காக உருவாக்கம் பெற்றாலும் இன்று அதே வலைதளம் மனித வாழ்வில் அங்கமாக மாறி விட்டது. நேரம் கிடைக்கும் போது பயன்படுத்தப்பட வலைதளம் இன்று நேரம் கழிக்கும் இடமாக மாற காலமும், தொழிநுட்பமும் காரணமாகி விட்டது.

உலகில் சுமார் 4.5 பில்லியன் மக்கள் வலைதளங்களில் உலா வருகின்றனர். அவற்றுள் சிறார்களும், இளைஞர்களுமே அதிகம் என்பது கவலைக்கிடமான விடயமாகும். வாழ்வது குடிலாக இருப்பினும் “20 ரூபா நெட் காட் தாங்களேன்“ என வாங்கிச் சென்று மாய உலகில் கனா காணும் கனவுக் கன்னிகளாக தற்கால சமூகம் மாறி விட்டது. ஏன் இந்த அளவு இவ் வலைதளம் வளர்ந்தமை என்றால் அவற்றிற்கு அளிக்கப்பட்ட பூரண மனித சுதந்திரம் எனும் உலகமாயமாக்கலாகும். இதனால் இன்று உலகம் உள்ளங்கையில் ஊசலாடும் பொம்மையாக மாறிவிட்டது.

இன்றைய உலகில் போதைப்பொருளாகி

வரும் வலைதளம் அன்று ஆடம்பராகவும் இன்று அத்தியவசிய பொருளாகவும் மாறிவிட்டது. இவற்றிற்கு அளிக்கப்பட்ட பூரண சுதந்திரத்தால் ஆபாச படங்களையும் வீடியோ பதிவுகளையும் இட்டு சிறார் முதல் யுவதிகள் வரை மனதில் சலனத்திற்கு உள்ளாக காரணமாகி விட்டது. மேலும் தவறான தகவல்களை பரப்பி பல பெண்களை காதல் எனும் பெயர் கூறி மணப்பதுடன் பலர் மன உளைச்சல்களுக்கு உள்ளாகி தற் கொலையும் செய்ய வழிவகுத்துள்ளது.

அதிலும் பரிதாபம் என்னவென்றால் அலைபேசியில் அல்லாடும் ஆண்களும், பெண்களும் தன்னை சுற்றி என்ன நடக்கின்றது என்பதை மறந்து விடுகிறார்கள். அதனால் இன்று பல குடும்பங்களின் உறவுகளின் முறிவிற்கும், தன் குழந்தைகளின் வெறுப்பிற்கும், அயலார் நண்பர்களின் புரிந்துணர்வற்ற தன்மைக்கும், பெற்றோரின் எதிர்ப்பிற்கும் ஆளாகின்றனர். இதனால் குடும்பங்கள் பிரிவதுடன் அவர்களை பார்த்து வளரும் குழந்தைகளும் சிறு வயது முதலே வலைதளத்தில் விளையாடும் மழலைகளாக மாறி விடுகிறார்கள்.

பூரண சுதந்திரம் எனப் பெயர் கொடுத்து இன்று வலைதளம் எனும் பெயரில் பொய் முகவரி இட்டு பலரது சொந்த விடயங்களில் களவாடுவதுடன், அவர்களிடையே அவற்றினை காட்டி பணம் பறிப்பதும், பல தவறான வேலைகளில் ஈடுபட வைப்பதும், வங்கி பணங்களை கூட களவாடுவது என பல உண்மைச் சம்பவங்கள் தொடர்ந்தும் தற்போது இடம் பெற்று வருகின்றன இதனால் பலர் மன உளைச்சலுக்கு உட்பட்டு வீட்டிற்குள் முடங்கிக் கிடக்கின்றனர் என கனடாவில் உள்ள கொலம்பியா பல்கலைகழகம் தன் ஆய்வில் குறிப்பிட்டுள்ளது.

சமூக வலைதளங்கள் உருவாக்கப்பட்டதன் முக்கிய நோக்கமே அவை தொலை தொடர்பாடலை விருத்தி செய்யும் எனும் நோக்கத்திலாகும். ஆனால் இன்றைய வலை தளங்கள் அருகில் உள்ள உறவுகளை பிரித்து விட்டு முகம் தெரிய பல உறவுகளை இணைத்து விடுகிறது. பல குடும்ப அமைப்பாய் இருந்த குடும்பங்கள் இன்று வட்சம் குழுமமாக உருமாற்றம் பெற காரணமாகி விட்டது. இன்றைய கால பிள்ளைகளை பெற்றோருடன் சிறிது நேரம் எடுத்து கூட பேச முடியாத அளவு தனக்குள்ளே முடக்கி விட்டது.

அதனை போன்றே சில பெற்றோர்களும் பிள்ளைகளுடன் நேரம் எடுத்து விளையாடவும் கற்பிக்கவும் நேரம் ஒதுக்காது சமூக வலைதள வசதிகளை கொடுத்து தானே தன் பிள்ளைகளுக்கு விஷத்தை ஊண்டுகின்றனர். சிறு வயது முதல் வலைதளங்களில் உலா வரும் குழந்தைகள் வலைதளம் எனும் வலையில் விழுந்து முடங்கி தன் எதிர்காலத்தையே பாழாக்கி கொள்ள வழிவகுக்கிறது.

வலைதளங்களில் பகிரப்படும் புகைப்படங்கள், வீடியோக்கள் மூலம் உருவாகும் அறிமுகமற்ற தொடர்புகளால் தன் பெற்றோரையும் வெறுத்து தன் வாழ்வை பாழாக்கும் சமூகம் இன்று உருவாகிக் கொண்டுள்ளது. அதனை தடுக்கும் பெற்றோரை கொலை செய்வதும், அல்லது பிடிவாதத்தால் தானே தற்கொலை செய்வதுமாக பல உயிர்களை உறிஞ்சிக் கொண்டிருக்கிறது இன்றைய வலைதளமாகும்.

தற்கால இளைஞர்கள் சமூக வலைதளங்களில் மூழ்கிப் போய் இரவு பகலாக கையாள்வதால் அதிகளவான மன அழுத்தங்களுக்கும், சோர்வுக்கும், மன உளைச்சலுக்கும், ஞாபக மறதிக்கும் உள்ளாகி இறுதியில் கண்

குறைபாடு, உயர் குருதி அமுக்கம், தலைவலி, இதய நோய்கள் போன்ற பல பாதிப்புக்களுக்கு உள்ளதாகுவதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.


தொடர்பாடல் துறையில் ஏற்பட்ட முன்னேற்றமானது சமூக வலைதளங்களை கையாள வழிவகுத்தாலும் இன்று வலைதளம் உருவாக்கப்பட்ட நோக்கம் தவறி உலகமே கையினுள் எனப் பெருமிதப்படும் மனித சமூகம் தாங்களும் அவற்றிற்கு அடிமையாகி கைபேசியின் கையினுள் முடங்கிக் கிடப்பதை மறந்தே விட்டார்கள்.

இவ்வாறு ஏகப்பட்ட சீரழிவுகளைத் தோற்றுவித்துள்ள சமூகவலைத்தளங்கள் பல வன்முறைகளுக்கும் கூட துணை புரியக் கூடியனவாக உள்ளன. குறிப்பாக கண்டி, தெல்தெனிய, திகன வன்முறைச் சம்பவங்களுக்கு சமூக வலைத்தளங்கள் தான் அடிப்படைக் காரணமாக அமைந்தன. அதனால் இவ் வன்முறையைக் கட்டுப்பாட்டு நிலைக்குள் கொண்டு வருவதற்காக சமூகவலைத்தளங்களை சில நாட்கள் கட்டுப்படுத்த வேண்டிய நிலைமை கூட அரசாங்கத்திற்கு ஏற்பட்டது.

இவை ஒருபுறமிருக்க, மாணவர்களின் சமூகவலைத்தளப் பாவனையும் பெரிதும் அதிரித்துள்ளது. அதனால் பருவத்தை மீறிய பழக்கவழக்கங்களுக்குள் தள்ளப்படக் கூடிய அச்சுறுத்தல்களுக்கும் அவர்கள் முகம் கொடுத்துள்ளனர். குறிப்பாக அதீத கன உலகிற்குள் அவர்கள் தள்ளப்படுகின்றனர்.இது மிகவும் ஆபத்தான ஒரு நிலைமையாகும்.

ஆகவே தனிப்பட்ட, குடும்ப மற்றும் சமூக ஆரோக்கியத்திற்கும் நாட்டின் பாதுகாப்புக்கும் தீங்கையோ , கெடுதல்களையோ ஏற்படுத்தாத வகையில் சமூக வலைத்தளங்கள் பாவிக்கப்பட வேண்டும். அதற்குத் தேவையான வழிகாட்டல்கள் வழங்கப்பட வேண்டும். இவ்விடயத்தில் அரசாங்கமும் சமூக ஆர்வலர்களும் கவனம் செலுத்த வேண்டும். அப்போதுதான் சமூக வலைத்தளங்கள் ஊடாக இடம்பெறுகின்ற மோசடிகளையும், முறைகேடுகளையும் சீரழிவுகளையும் தவிர்த்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

எம்மில் விதைகளை நட்டினால் நல்ல கனிகளை உண்ணலாம் விஷத்தினை தூவினால் விஷத்தையே பெறலாம். எனவே அடுத்து வரும் நம் தலைமுறையினருக்கு நல்ல விடயங்களை எடுத்துக் கூறி சமூக வலைதளங்களுக்கு அடிமையாகாமல் அவற்றை நம் கட்டுப்பாட்டிற்குள் வைத்து ஓய்வு நேரங்களை பயனுள்ளதாய் மாற்றி நம்மில் புது மாற்றம் வர பணி புரிந்து எம்மையும் இனிவரும் தலை முறையினரையும் பாதுகாப்போம்.





# பின்வரிசை!!!!

உன்னை பின்வரிசை என்று
கேவலமாக பார்ப்பவர்களை
பார்த்து  நீ கவலைப்படுவது உன்
முட்டாள் தனம் .

அவர்கள் எதை கேவலமாக
பார்த்தார்களோ அதே விஷயத்தில்
உன்னால் முடியும் என்று வாழ்ந்து
காட்டுவதுதான் அவர்களுக்கு நீ
கொடுக்கும் பதிலடி

நீ இன்று பின்வரிசையில்
இருக்கலாம் ஆனால் அந்த
பின்வரிசையே உனது
அடையாளமாக மாறிவிடக்கூடாது.

அந்த பின்வரிசையையும் முன்
வரிசையாக்குவது உன்
கையில்தான் உள்ளது நண்பா.

உன்னை இந்த உலகம் கேவலமாக
பார்க்கும் ஒவ்வொரு தடவையும் நீ
உனக்குள் சொல்லிக்கொள் நீ
சாதிக்க பிறந்தவன் நீ சாதிக்க
பிறந்தவன்  என்று. அதுவே
உனக்கான உந்து சக்தி நண்பா.

நீ முயற்சி செய்தால் உன்னாலும்
முடியும் உன் பின் வரிசையை முன்
வரிசையாக்க.

உன்னை கேவலமாக பார்த்த
அவர்களையே உன்னை
ஆச்சரியமாக பார்க்க வைக்க
முடியும்.
முயற்சி செய் முயன்றால்
முடியாதது எதுவும் இல்லை நண்பா



ஜஸ்ரா ஜலீல்
மலேசியா



# மனிதனே நீ அறியவில்லையா

மனிதனே உன்னை அளவிடும்
கருவி– பணம் பத்தும் செய்யும் அது
பழமொழி
பத்தும் பணமாக இருந்தால் எல்லாம்
செய்யும் இது புது மொழி

மனிதா நாளை நாளை என்று–நீ
சேர்த்து வைக்கும் பணம் எங்கு தான்
செல்கிறது..?
விண்ணிற்கா..?– இல்லை
மண்ணிற்கா..?

பணமென்று ஒன்று இல்லையேல்
மனம் ஒன்று இல்லையோ
இது எங்கே புரியப்போகிறது – இந்த
ஜனத்திற்கு

இன்றைய உன் மாடிவீடு – நாளைய
உன் மையவாடி
இன்றைய உன் கேலிக்கூத்து –
நாளைய உன் கேள்விகணக்கு
இதையெல்லாம் – நீ
அறிவில்லையோ

மனிதா இப்புவூலகில் எதுவுமே
இல்லையே – நிரந்தரமாக
ஏதேனும் வேண்டுமா..?
அல்லாஹ்வின் அன்பே – என்றும்
நிரந்தரமாக

தேடிப் பெற்றுக்கொள் பணத்தை –
அல்ல படைத்தவனின் அன்பை
சேர்த்து வை உடமையை – அல்ல
நன்மையை

அறிந்து கொள் – மனிதா
ஒரு நொடி போதும் உன்
நிலைமையை
மாற்ற–படைத்தவனிற்கு
பயந்து வாழ் அதுவே உன்னை
உயர்த்தி காட்டும்–குணத்தால்



சஹீரா யாசீன்
மாவனெல்ல



# தொலைத்தேன்

மழலையின் மழலை மொழி கொஞ்சும்
மதிப்பற்ற மொழிகளிலே
என்னை தொலைத்தேன்.....

பசுந்தரையில் பச்சைப்பசேலென
காட்சியளிக்கும் வயற் பரப்புக்களின்
வதனத்திலே
என்னை தொலைத்தேன்.....

உலகின் உன்னதமான பொழுதான
இராப் பொழுதினிலே பௌர்ணமியின்
அழகைக் கண்டு
என்னை தொலைத்தேன்...

மாறிக் கொண்டிருக்கும் மகியில்
மாறா அன்பை பொழியும்
பெற்றோரின் மனதை கண்டு
என்னை தொலைத்தேன்....

இறுகிய சூழ்நிலையிலும்
தளரா இதயம் கொண்டு தன்னை
அர்ப்பணிக்கும் தாதிகளின்
தன்னம்பிக்கையில்
என்னை தொலைத்தேன்.....

முகவரிகளை தொலைத்த முகில்கள்
மனக்கவலையால் சோவெனப்
பொழிந்த கண்ணீரிலே
என்னை தொலைத்தேன்....

கட்டுக் கடங்கா என் கவலைகளை
சுஜூதிலே விழுந்து இறைவனிடத்தில்
முறையிடுகையிலே
முழுவதுமாய்
என்னை தொலைத்தேன்...



நிஷ்பா நஸார்
கன்னத்தோட்டை



# கைப்பேசிக்குள் இலவசக்கல்வி
# எட்டாக்கனியே ஏழை எனக்கு

கற்றல் அரங்கேற்றமாம்
ஏழை மாணவனுக்கோ
கல்வி விலையேற்றமாம்
இலவசக் கல்வி...

காசாகி போனது கல்வி
ஏழைகளுக்கு எட்டாக்கனியானது..
கற்றுக்கொள்ள ஆயிரம்
ஆயிரம் இருந்தும்
ஏனோ அவனால் கற்க இயலவில்லை..

அவனிடம் ஆயிரம்
ஆயிரம் இல்லாததால்
ஒரு கைப்பேசி
வாங்க இயலாது போனது...

அனைத்திற்கும் கல்வி தான் உறுதி...
மனம் குழம்புகிறதே
பணத்தின் நிலை கருதி...

கைப்பேசி இல்லாப்படிப்பு
சுகம் தராது என்று சொல்லி
கூறுப்போட்டு படிப்பில்
குதர்க்கம் புரிகின்றனர்.....

பிள்ளைகளுக்கு பாடச்சுமை
பெற்றோருக்கு பணச்சுமை
ஆசிரியர்களுக்கு பணிச்சுமை
என்பதாலோ உறக்கம்
வந்தும் மூட மறுக்குது ஏழை
மாணவர்களின் இமை..

ஏ.சி அறைக்குள் ஈசி சியாறில்
இருந்து கொண்டு
ஓசி வாகனம் ஓட்டுவோருக்கு
ஏழை மாணவர்கள்
படும்பாடு அவஸ்தை புரியுமா??

உருப்படி உணவில்லா
வீட்டின் ஒப்பாரி கேட்குமா??
இயற்றுங்கள் புது சட்டம்
ஏழை இவள் படிப்பதற்காக.....



இவள்-முஹம்மட் பசீர்
ரம்சியா பர்வீன்
அலுத் வத்த- ஹக்கல



# கிழக்கு மாகாணத்திற்கு தேசிய ரீதியில் 3 விருதுகள் New Generation Awards 2021...

இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுதுறை அமைச்சு, Wim ( women in Management ) இலங்கைக்கான கிளை மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், “எழுந்து பிரகாசிக்கவும்” என்ற தொனிப்பொருளின் கீழ் ‘புதிய தலைமுறை விருதுகள் 2021’ New Generation Awards 2021 யை ஏற்பாடு செய்திருந்தது. குறித்த விருது விழாவில் கிழக்கு மாகாணத்திற்கு 3 பிரிவுகளில் 3 விருதுகள் கிடைக்கப்பெற்றன.

இலங்கை இளைஞர்களின் மறைந்திருக்கும் திறமைகளை கண்டறியும் பயணத்தில், தேசத்திற்கு அவர்களின் உயரிய பங்களிப்பை கௌரவிக்கும் வகையில் தொடர்ந்து 2வது ஆண்டாக புதிய தலைமுறை விருதுகளை 29ஆம் திகதி ஒக்டோபர் மாதம் 2021 கலதாரி நட்சத்திர ஹோட்டலில் மிக விமர்சையாக சுகாதார வழிமுறைகளை பேணி நடைபெற்றது.

இவ் விழாவில் 29 விருதுகள் தேசிய ரீதியில் பல்துறைசார் திறமைகளை வெளிக்காட்டிய இளைஞர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டது.

இவ்விழாவின் பிரதம அதிதியாக கௌரவ அமைச்சர் நாமல் ராஜபக்ஷ கௌரவ இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் Dr.சுலோச்சனா சேகேரா, தமிந்த விக்ரமசிங்க, Senior DIG அஜித் ரோகண Dr. ஹிமாலிடி சில்வா உட்பட பல உள்நாட்டு வெளிநாட்டு பிரமுகர்களும் துறைசார் நிபுணர்களும் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தனர்.

இவ்விழாவில் N.J.செரோன் அனாஸ் பல்கலைக்கழக பிரிவில் வழங்கப்பட்ட ஆண்டின் அதி சிறந்த பல்கலைக்கழக இளமானி பட்டதாரி விருதினை பெற்றிருந்தார் இவர் ஜேனரல் சேர் ஜோன் கொத்தலாவல தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழக கதிரியல்




புற்றுநோய் சிகிச்சை பிரிவில் தனது கல்வியை கற்றுக் கொண்டிருப்பதோடு சர்வதேச மற்றும் தேசிய ரீதியில் இலங்கையை பிரதிநிதித்துவம் செய்து பல்வேறு அடைவுகளை பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. அதே போன்று மட்டக்களப்பு மாவட்டத்தை சேர்ந்த J.M Azeem ஆண்டின் அதி சிறந்த மனிதாபிமான செயற்பாட்டாளருக்கான விருதை பெற்று கிழக்கு மாகாணத்திற்கு பெருமை சேர்த்தார்.

தனது வாழ்நாட்களை தனது சமூகத்தினை வலுவூட்டுவதற்காக ஏழ்மையை பெருட்படுத்தாது எதிர் நீச்சல் அடித்த இவர் 2014ஆம் ஆண்டு கிழக்கு மாகாண விவசாய திணைக்களத்தில் நிரந்தர நியமனம் பெற்று துறைசார் தனது தொழில்துறையை ஆரம்பித்தார்.

மேலும் 2019ஆம் ஆண்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் இளம் ஹீரோ விருது, 2020ஆம் ஆண்டு இளம் விவசாய விருது போன்ற விருதுகளை தன்னகப்படுத்தி இன்று தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மாவட்ட சம்மேளன அமைப்பாளராக இருப்பதோடு பிரதேச இளைஞர் கழக சம்மேளன தலைவராகவும் இருந்து பல செயற்பாடுகளை செய்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருதை சேர்ந்த ஏ.ஆர்.முகமது ஜப்ரான் 2021–ம் ஆண்டின் இளம் விவசாய வல்லுனருக்கான விருதை வென்றார். இவர் விவசாயம் நமது கலாச்சாரம் என்ற தேசிய ஆய்வை மேற்கொண்டவர். பாரம்பரிய முறைகள் மற்றும் இயற்கை பாதுகாப்புடன் நவீனத்தையும் இணைத்து சிறந்த திட்டமிடலுடன் கூடிய புதிய விவசாய முறையை அறிமுகப்படுத்துவது நமது நாட்டுக்கு இன்றியமையாதது. புதிய விவசாய முறையில் இளைஞர்களை தொழில் முனைவோர்களாக்கி, நாட்டின் பாரம்பரியத்தை பாதுகாத்து, புதிய பொருளாதாரத்தை ஏற்படுத்துவதே உயரிய நோக்கமாகக் கொண்டு பல விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார்.

”விவசாயம் எங்கள் அடையாளம், அவமரியாதை அல்ல” என்ற இலக்கோடு இளைஞர்கள் மத்தியில் விவசாயத்தை கொண்டு சேர்க்க பாடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இவர் விவசாய உயர்தொழிநுட்பம் கற்று உயர்தரத்தில் சிறந்த சித்தி பெற்றதுடன் விவசாய சார் கண்டுபிடிப்புகள், விவசாய சார் தேசிய வேலைத்திட்டங்கள் போன்றவற்றிலும் பங்குபற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# தாய்ப்பால் ஊட்டுவதன் உளவியல் ரீதியான முக்கியத்துவங்கள்



அஸ்னா சுயீதா
மருதமுனை

உளவியல் ரீதியான பிரச்சினைகளை எதிர்கொள்ளும் பலருக்கு சரியான தாய்ப்பாலூட்டல் நடைபெறவில்லை என்றால் நம்புவீர்களா ?

ஒரு குழந்தையை உணர்ச்சி நல்வாழ்வு மிக்க மனிதராக சமூகத்தில் நிலை நிறுத்த தாய்ப்பாலூட்டல் ஒரு சிறந்த முறை ஆகும். குழந்தைகள் அதிகமதிகம் தன் மீது தாயின் கவனம் இருக்க வேண்டும் என எதிர்பார்ப்பார்கள் இந்த எதிர்பார்ப்பை “முறையாக“ தாய்ப்பாலூட்டும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஒரு தாய் பூர்த்தி செய்கிறாள் .

தாய் தனது குழந்தையின் கண்களை பார்க்கிறாள், குழந்தையுடன் பேசுகிறாள் ,குழந்தையை தொட்டுணருகிறாள் ,இது ஒரு தனித்துவமான இணைப்பு ஆகும் .இவ்விணைப்பு குழந்தைக்கு ஆறுதல் அளிக்கும் ஒரு செயன்முறையாகும் உடல் ரீதியாகவும், உணர்ச்சி ரீதியாகவும், உளவியல் ரீதியாகவும். இது அறிவாற்றல் வளர்ச்சிக்கும் பங்களிக்கிறது..
குழந்தைக்குக்கும் தாயின் மார்பு சுவருக்கும் அதிக நெருக்கம் இருப்பதால் குழந்தைக்கு இது தாய் வழி இதயத்துடிப்பை அனுபவிக்க அனுமதிக்கிறது, இது கருப்பையில் இருந்த போது குழந்தை கேட்டு பழக்கப்பட்ட ஒரு மொழியாகும். பாலூட்டும் மார்பகத்தின் அரவணைப்பு கருப்பையின் பழக்கமான அரவணைப்பாக மாறுகிறது .

தாயுடன் குழந்தைக்கு ஏற்படும் இப்பிணைப்பு அவர்களின் எதிர்காலத்திற்கு மிகவும் பங்களிப்பு செய்கிறது. அதாவது குழந்தைகள் ஒரு குறிப்பிட்ட சுதந்திரத்தை அடையும் போது சுற்றியுள்ள உலகில் ஆர்வத்தையும் நம்பிக்கையையும் வளர்த்துக் கொள்கிறார்கள். இது தாய்ப்பால் கொடுக்கும் கலையின் அடிப்படையான இணைப்பிலிருந்து உருவாகும் நேர்மறையான உணர்ச்சி வளர்ச்சியாகும். முறையான தாய்ப்பால் கொடுத்த பதினைந்து முதல் பதினெட்டு வயது வரையிலான பிள்ளைகள் பெற்றோருடன் சரியான

முறையில் இணைந்திருக்கிறார்கள் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன .

பிள்ளைகள் வளரும்போது குடும்ப வாழ்க்கை பரபரப்பாகிறது பெரும்பாலும், ஒரு பிள்ளை குறிப்பிட்ட வயதை அடையும் போது பெற்றோரின் கவனத்தில் இருந்து விலகிச்செல்லலாம். இந்நிலையில் இருந்து விடுபட்டு பிள்ளை தாயின் மீது ஒரு இனம் புரியாத பாசத்தை தொடர்ச்சியாக வைக்க தாய்ப்பாலூட்டல் உதவுகிறது .அதே போல் தாய்க்கும் கவனக்குறைவை ஏற்படுத்தாமல் இருக்கவும் உதவும் .

குழந்தைகள் வலியால் தொடர்ச்சியாக அழும்போது தாய்ப்பால் ஊட்டி கவனத்தை திருப்புவதாக தாய்மார்கள் எண்ணுகிறீர்களா? உண்மையில் நடப்பது என்னவென்றால், பால் கொழுப்பை குழந்தைகள் உறுஞ்சுவதன் மூலம் வெளியாகும் ஹோர்மோன் ஒருவகையான இனிப்பான நோய் எதிர்ப்பு திரவத்தை வெளி விடுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இது வலி நிவாரணத்தைத் தூண்டுகின்றன. மேலும், இந்த இனிப்பு பால் மூளையில் ஒரு போதை போன்ற விளைவைத் தூண்டுகிறது, வலியின் உணர்வைக் குறைக்கிறது. இறுதியாக, தோல்–க்கு–தோல் தொடர்புபட்டு மன அழுத்தம் மற்றும் இரத்த அழுத்தத்தைக் குறைக்கிறது மற்றும் உடல் வெப்பநிலை மற்றும் சுவாச விகிதங்களை உறுதிப்படுத்த உதவுகிறது.

தாய்ப்பால் நிறுத்தப்பட்ட பின்னரும் குழந்தைக்கு உளவியல் நன்மைகள் தொடர்கின்றன. அதாவது தாய்ப்பால் குழந்தைகளின் சமாளிக்கும் திறனையும் அனுசரிக்கும் திறனையும் அதிகரிக்கின்றது . தாயைப் பொறுத்தவரை, தாய்ப்பால் கொடுக்கும் போது வெளியாகும் ஆக்ஸிடாஸின் இனிமையான விளைவு, குழந்தைகளால் தவறாக நடத்தப்படுவது அல்லது குழந்தை புறக்கணிக்கப்படுவது கணிசமாகக் குறைவதற்கு ஆராய்ச்சியாளர்களால் குறிப்பிடப்பட்டுள்ளது.

தாய்ப்பால் பெண்களுக்கு பிற உளவியல் நன்மைகளை வழங்குகிறது. தாய்ப்பால் கொடுக்கும் ஹார்மோன்கள் தாய்மார்களுக்கு கோபம் அல்லது எதிர்மறை மனநிலையைத் தவிர்க்க உதவுகின்றன, மேலும் அவர்கள் நன்றாக தூங்க உதவுகின்றன, மேலும் மன அழுத்தத்தைக் குறைக்கின்றன, இதனால் மனச்சோர்வு குறைவாக இருக்கும், இதனை அவர்களின் குழந்தைகளும் அனுபவிக்கும் .

இருப்பினும், சில பெண்களுக்கு குழந்தை பிறந்த பின்பு அதிக மனச்சோர்வை உணர்வார்கள், தாய்ப்பால் கொடுப்பது மனச்சோர்வை நிர்வகிக்க ஒரு பயனுள்ள வழியாகும்.

தாய்ப்பால் உரிய முறையில் கொடுக்கப்படாத குழந்தைகள் தாய்வழி மனச்சோர்வு மற்றும் அசாதாரண நிலைமைக்கு அதிகம் ஆளாவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன .

**போதைக்கு அடிமையாதல்**

**துஸ்ப்பிரயோகங்களில் ஈடுபடுதல் போன்றன.**



# அன்னையே உன் அழகில்

இரண்டு கைகள் இரண்டு கால்கள்
ஆயிரம் முத்தங்கள்
அழகான புன்னகை தாயே

உன் கண்கள் நடனமாடும்
அழகான மயில்தோகை
சேற்றை அள்ளி சேலையில்
பூசினாய்
அதில் வியர்வை சிந்தி
பசியை போக்கினாய்

ஆயிரம் அழகிகள் அருகில்
இருந்தாலும்
உன்னைப்போல் ஒரு அழகியை
இவ்வுலகில் இனிமேல்
என்று காண்பேனோ???

நீ சிலையாக இருந்தால் அழகுதான்
உன்னை சிற்பமாக செதுக்கும்
அந்த சிற்பி கூட உன் அழகை
பார்த்து அதிர்ந்துபோவான்

தாயே!! அழகு என்பது
அவள் முகத்தில் பூசும்
பவுடர் அல்ல

நீ புன்னகையோடு வெள்ளை
முத்துபோன்ற
பற்களைக் கொண்டு
புன்னகை செய்கின்றாயே
தாயே அது தான் அழகு!!

அவளின் முகம் வெள்ளையாக
இருப்பது
மட்டுமே அழகு அல்ல,
சேற்றில் இறங்கி
சோற்றை கொடுத்தும்
பசிக்கு பாலும் கொடுத்தாயே
அதுதான் தாயே அழகு,

இதைவிட இவ்வுலகில் வேறு எதுவுமே
அழகு இல்லை தாயே
அம்மா என்னும் அந்த
அழகிய சொற்களை
சொன்னாலே அழகுதான் தாயே!!!



ஏரூர் இர்ஷானா

# பூக்க மறந்த பூக்கள்

அறம் செய்யா அதிபதி
அகங்காரமுள்ள அரசன்
ஆணவமுள்ள ஆன்மாக்கள்
ஆண்டவனை மறந்த ஆண்டி
இல்லாள் இல்லா இல்லம்
இளமையில் கல்லா கல்வி

இத்தனையும் இல்லையானால் – யாவும்
பூக்க மறந்த பூக்களே!!!!

ஈகையில்லா மன்னன்
ஈனச்செயல் புரியும் நண்பன்
உண்மை பேசா உளவாளி
உறங்க மறந்த மந்திரி
ஊக்கமில்லா ஊழியன்
ஊனமுற்ற மனத்தான்

அத்தனை அம்சமும்
பூக்கமறந்த பூக்களே!!!!

எண்ணித்துணியா கருமம்
எண்ணமில்லா வாழ்வு
கவிஞன் மறந்த கவிதை
கலைஞன் மறந்த கலை
காதலன் விரும்பா காதலி

சத்தியம் காக்கா சந்தர்ப்பவாதி
சண்டையில் மாட்டும் சண்டாளன்
சிகரம் தொட அஞ்சுபவன்
சிக்கல் கண்டே கலங்குபவன்
சீதன சீர்கேடுள்ள சமூக மக்கள்
சகலதும் சீராகும் வரை

பூமியெங்கும் பூக்க மறந்த பூக்களே –
அனைத்தும் பூத்தால் பூமி சிரிக்குமே!!!!



றிப்கா அன்ஸார்
சாய்ந்தமருது











# நான் எனப்படும் நமக்கு

எப்பொழுதும் போல மேகங்களை
தூது விடும் வானமாய் நானும்
சில கனவுகளோடு
காத்திருக்கிறேன்...
விரிந்த வான வீதியில் கூடு திரும்ப
மறந்து போன

ஓர் ஒற்றைப்பறவையாய்
அலைந்து கொண்டிருக்கிறேன்
எப்பொழுது எங்கே செல்வேன்
எனும் வினாக்குறியோடு...
மாலையில் விடைபெற்றுச் சென்ற
காதலியின் கைச்சூட்டின்
கதகதப்பில் இலயித்து மெய்மறந்து

போன காதலனாய்
நான் காத்திருக்கிறேன்
எனக்கே எனக்கான
பொழுதொன்றுக்காய்... நான்
பூபாளங்களை உனக்கு பரிசாய்
அனுப்பி வைக்கிறேன்

நீயோ முகாரிகளில்
முகம் புதைத்துக் கொள்கிறாய்....
உன் மௌன இராஜ்யத்தில்

ராஜாவாக வேண்டும்
என்ற ஆசையில்லை

எனக்கு உன் குடிசை வீட்டின்
கிண்கிணியாய் நான் மாற
வேண்டும்...
சின்னக் கனவுகள் சிரிக்கும்
பொழுதுகள் கண்ணீர் தொலைக்கும்
கணங்கள்...

வேண்டும் வேண்டும் மனம்
அதையே தினம்.



பாதிமா றினோஸியா
மாவனல்ல

# குடை மறந்த மழை நாட்கள்..



இருண்ட மேகம் விலக்கி
பொழியப்படும் ஓர்
மழைநாள் ரசித்தலானது
சிறுமைதொட்டு இன்றுவரை
எனக்கு–ஓர் பழக்கமாகிப்போனது....

என்–ஒவ்வொரு மழைநாட்களும்
ஏதாவதோர் அழுத்தமான நினைவையோ
என்றோவோர்நாள்–நான்
மறந்திடக்கூடுமென்ற நிகழ்வையோ
நினைவுபடுத்தாமல்
ஒருநாளும் நகர்ந்திடுவதேயில்லை....

அப்படித்தான் ஓர்நாள்
எனக்கென்றே வாங்கித்தரப்பட்ட
நீலக்குடையொன்றை
மறந்தே வீடுதிரும்பியிருந்தேன்..
நானாக இந்நிகழ்வை ஊகித்திடும்வரை
குடை என் நினைவுகளைவிட்டே சற்று
தூரமாய் நகர்ந்திருந்தது..

குடை பற்றிய என் கவலைகள்
இன்றெண்ணும்போது
அவ்வளவு ஆத்மார்த்தமாய்
எனக்குள் இல்லவே இல்லைதான்..
ஆயிடினும் எந்தக்கஷ்டங்களும்
தொட்டுக்கூடப்பார்த்திராத
என் அன்றைய சிறுநெஞ்சில்
அந்தக்குடையின் நிலைகள்மட்டுமே
ஆழமாய்க் குடிகொண்டிருந்தன...

என் அழகிய கனவுகளைக்கூட
அந்தக்குடையின் பிரிதல்கள்
கனமாய் நனைத்திருந்தன...

தலையணை தேடிய நொடிதொட்டு
விடியும் பொழுதுவரை
என் அத்தனை உறக்கங்களையும்



**றுஸ்தா சிறாஜுடீன்**
**நற்பிட்டிமுனை.**

அந்தக்குடையின் ஏக்கங்கள்
அப்படியே விழுங்கியிருந்தன..
இத்தனைக்கும் அதுவோர்
குடையொன்று மட்டும்தான்...

வேகவேகமாக மனதில் ஆயிரம் எண்ணம்சுமந்து
கால்கள் நகர இதயம் வழமையை விட சற்று
வேகம்கூட எப்படியோ
காற்றைக்கிழித்து– நான்
என் வகுப்பறையை நெருங்கியிருந்தேன்..

மொத்தவாழ்வின்
சந்தோஷங்களும் ஒன்றுகூடி
என் உடல்புகுந்து என்னை
உலுக்கிப்பார்த்ததுபோல் உணரச்செய்தமை..
என் நீலக்குடை நான் விட்டுச்சென்ற
இடத்திலேயே எனக்காய்
விடியவிடியக்காத்திருந்தது...

யாதுவாகிடினும் எப்பொழுதுகளிலும்
பிரிதலென்பது வலிக்கத்தான்செய்யுமென்பதை..
என் நீலக்குடை எனக்குள்
எப்போதோ விதைத்திருந்தது...

ஆதலால்தான்
மழைநாட்கள்–எனக்கு
அத்தனை பிரியமாகிப்போனது.....!!

# அனைத்து பதிப்புகளும் டிஜிட்டல் தொழில்நுட்பத்தில் உங்கள் கைகளில்...




## துணிந்தெழு

வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்

**இணையதளத்திற்கு பிரவேசியுங்கள்**

**www.skymediasl.com**

@skytamil.lk



skytamil.lk@gmail.com

**துணிந்தெழு இதழில் உங்கள் விளம்பரங்களைப் பிரசுரிக்க**

**தொடர்புகளுக்கு**

**077 639 11 88**

**077 247 1464**

9 772792 102002